உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 22 சனிக்கிழமை (05-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:130



ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள யுத்தத்தைக் கண்டித்து புதிய ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ். பஸ்நிலையப் பகுதியில் நேற்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:வசந்தகுமார்)

# ஈராக் போரைக் கண்டித்து நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

## புதிய ஜனநாயகக்கட்சி ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஏப்.5

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்துள்ள யுத்தத்தைக் கண்டித்து நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.பஸ் நிலையப் பகுதியில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

புதிய ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சுமார் 40 நிமிடங்கள் இடம்பெற்றது. யுத்தத்திற்கு எதிராகவும், அமெரிக்காவைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டவர்கள் கோஷமெழுப்பினர். ஆர்ப்பாட்டத்தின் போது அவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

அந்தச் சுலோக அட்டைகளில் இருந்தவற்றில் சில சுலோகங்கள் வருமாறு:-

★ அமெரிக்க ஏகாதிபத்தியமே

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரணியும் முழு எதிர்ப்பு!

## செய்தியாளர் மாநாட்டில் அறிவிப்பு

கொழும்பு,ஏப்ரல்5

**சமாதான முயற்சிகள் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை இப்போது நடத்தும் அரசின் திட்டத்துக்கு எதிர்க்கட்சிகளும் முழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.**

**எதிர்க்கட்சிகளின் இந்த நிலைப்பாட்டை எதிரணியின் பிரதம கொறடாவான மங்கள சமரவீர நேற்று செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.**

அமைதி முயற்சிகள் தொடர்பாக மக்களுக்கு இன்னும் தெளிவு ஏற்படவில்லை. இந்நிலையில், அது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது முட்டாள்தனமானது - என்றார் அவர்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் செய்தியாளர் சந்திப்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலான ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அங்கு மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது:-

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சனியும் ஞாயிறும் கடைகள் திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5

எதிர்வரும் புத்தாண்டை ஒட்டி சகல வர்த்தக நிறுவனங்களும் இன்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு விடுமுறைத்தினங்களிலும் திறந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ஒ-3)

# கடும் நிபந்தனைகளின் கீழ் ஜெயா மாஸ்ரருக்குப் பிணை

## யாழ்.மேல் நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.5

'புளொட்' அமைப்பின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.ஜெயச்சந்திரன் (ஜெயா மாஸ்ரர்) வழக்கு விசாரணைக்கு ஒழுங்காக நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காமைக்காக மன்னிப்பு கோரியதையடுத்து, கடும் நிபந்தனைகளின் கீழ் அவரைப்பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கரவெட்டியில் இளைஞன் ஒருவர் தலைவெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தர்சமயம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஜெயச்சந்திரனை பிணையில் விடுமாறு கோரி அவரது சட்டத்தரணி கே.எஸ்.பாலகிருஷ்ணன் மனு ஒன்றை யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

பிரஸ்தாப நபருக்கு 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வவுனியா மேல் நீதி மன்றம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# வாஷிங்ரன் மாநாட்டுக்கு அழைக்காதது குறித்து புலிகளின் வன்னித் தலைமைப் பீடம் அதிருப்தி

ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னோடி நிகழ்வாக எதிர்வரும் 14 ஆம் திகதி வாஷிங்ரனில் நடைபெறும் சமாதான ஆதரவு மாநாட்டுக்கு தாம் அழைக்கப்படாதது குறித்து தமது அதிருப்தியை புலிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

தமிழர்களின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டுக்கு புலிகள் அழைக்கப்படாமை தற்போதைய சமாதான நடவடிக்கைகளைப் பாதிப்பதாக அமையும் என்றும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள தலைமையகத்தில் இருந்து நேற்று விடுத்துள்ள அறிகையொன்றிலேயே புலிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான சர்வதேச நிதியைத் திரட்டும் முயற்சியில் இலங்கை அரசும் புலிகளும் சமாதான - இணையான - பங்களிப்பைச் செய்ய வேண்டும் - இப்படி இருதரப்பும் நோர்வே ஏற்பாட்டிலான சமாதான முயற்சிகளின் போது இணங்கியிருந்தன.

உடனடி மனிதாபிமானப் பணிகளுக்கான உபகுழு (சிரான்) இந்த அடிப்படையிலேயே உருவாக்கப்பட்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழிப் பகுதியில்

# மிதிவெடியுடன் விளையாட்டு; சிறுவன் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,ஏப்.5

மிதிவெடிக்கு கல்லால் எறிந்து விளையாடிய சிறுவர்களில் ஒருவன் அந்த மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்தான்.

நாவற்குழி வீரபத்திரர் கோயிலடியில் நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.இதில் அதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா கனோஜன் (வயது 12) என்ற சிறுவனே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். கனோஜன் உட்பட 3 சிறுவர்கள் தோட்டக்காணி ஒன்றில் கண்டெடுத்த மிதிவெடியை நிலத்தில் வைத்துவிட்டு அதற்கு கல்லெறிந்து விளையாடியதாகவும்- கல் பட்டும் மிதிவெடி வெடிக்காததால கனோஜன் மிதிவெடி அருகேசென்று கல்லைத்தூக்கி அதன்மீது போட்ட போது அது வெடித்ததாகவும் - இதில் கனோஜன் படுகாயமடைந்ததாகவும்- தெரிவிக்கப்பட்டது.

மற்ற இரு சிறுவர்களும் காயமின்றித் தப்பினர். (ஒ-12)

# பேச்சுமேசையில் விடுதலைப் புலிகளை தொடர்ந்து வைத்திருக்க ரணில் முயற்சி!

## இப்படிக் கூறுகிறார் லக்ஷ்மன் கதிர்காமர்

கொழும்பு,ஏப்.5

விடுதலைப்புலிகளை பேச்சு மேசைக்கு கொண்டுவந்துள்ள ரணில் அரசு, அவர்களை எந்த விதத்திலாவது தொடர்ந்து பேச்சு மேசையில் வைத்திருக்கத் துடிக்கின்றது.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமம்.

'பிஸ்னஸ் லைன்' சஞ்சிகைக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தப் பேட்டியில் லக்ஷ்மன் கதிர்காமர் கூறிய முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

பணக்துட் பேச்சு மூலம் தீர்வு காண்பதுதான் சமாதான நடவடிக்கைகளின் நோக்கம்.

இந்த சமாதான நடவடிக்கைகள் 16 மாதங்களாகத் தொடர்கின்றன. இருதரப்பு இணக்கத்துடன் கூடிய யுத்த நிறுத்தம் 12 மாதங்களாகத் தொடர்கின்றது. நேருக்கு நேர் துப்பாக்கிச்சமர் நடக்கவில்லைத்தான். ஆனாலும், பல தடவைகள் யுத்த நிறுத்த மீறல்கள் இடம் பெற்றுள்ளன.

முல்லைத்தீவில் சீன ட்றோலர் மூழ கடிக்கப்பட்டது. இதைத் தாங்கள் செய்யவில்லை என்று புலிகள் மறுத்தாலும் எவரும் அந்த மறுப்பை நம்பவில்லை.

ஆயிரத்து இருநூறு துருப்புக்களுடன் சென்று கொண்டிருந்த கப்பல் மீது சில தினங்களுக்கு முன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

அதனையும் இப்போது மறுத்துள்ளார்கள். வங்காளவிரிகுடாவில் ஆயுதம் தாங்கிய கிரிமினல்கள் செயற்படுவதாக அவர்கள் கூறுவது அப்பட்டமாக முட்டாள் தனமானது.

*கேள்வி:* புலிகள் எப்போதும் இந்த உத்தியைத்தான் பயன்படுத்துகின்றனரே?

*பதில்:* ஆம். ஆனால், நோர்வே கண்காணிப்பாளர்களும் இந்த விளையாட்டில் பங்குகொள்வதுதான் மோசமானது. புலிகள் ஒளித்து விளையாடுவதற்கு கண்காணிப்புக்குழு உதவுகின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஜீ.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் இன்று இணையத்தளத்தில்

கடந்த டிசெம்பரில் நடந்த ஜீ.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் இன்று காலை இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள அதிகாரியொருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

பரீட்சை முடிவுகளை நேற்றே வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் - தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்றிரவு வெளியிட முடியாது போய்விட்டதாகவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பரீட்சை ஆணையாளர் உட்பட உயர் அதிகாரிகள் பரீட்சை முடிவுகளை வெளியிடும் பணிகளை நேற்று நள்ளிரவுவரை மேற்கொண்டிருந்தனர் என்றும் அவர் கூறினார். (ஒ-3)

# அமைச்சர் பந்துல இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.5

கிராமிய பொருளாதார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தனா இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

மருதனார்மடம், சங்கானை ஆகிய இடங்களில் நவீன சந்தைக் கட்டடங்கள் அமைப்பது தொடர்பாக அமைச்சர் நேரில் ஆராய்வார்.

அதன் பின்னர் உடுவிலில் விவசாயிகளைச் சந்தித்து அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிவார்.

அமைச்சருடன் அமைச்சுச் செயலர் மற்றும் கட்டட நிபுணர் குழுவினரும் வருகின்றனர். (ஒ-3-12)



புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனத்தின் யாழ்ப்பாணத்துக்கான கிளை நேற்று கோவில் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மேற்படி நிறுவனத்தின் இலங்கைக்கான அமைப்பாளர் மேரிஷீஹான், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் ஆகியோர் மங்களவிளக்கேற்றுவதனையும், நிறுவனத்தின் சர்வதேச பணிப்பாளர் நாயகம் பிறவுன்ஷன் மெக்ஹறன்லி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: வசந்தன்)

# தற்போதைய சமாதானச் சூழலை மேலும் வலுவடையச் செய்வதே எமது நோக்கம்

## புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான நிறுவனப் பிரதிநிதி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.5

தற்போதைய சமாதானச் சூழலை மேலும் வலுவடையச் செய்வதே எமது முக்கிய நோக்கம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனப் பணிப்பாளர்நாயகம் பிரவுன்சன் மெக்ஹறன்லி.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனத்தின் யாழ். கிளையின் புதிய அலுவலகம் நேற்று கோயில் வீதியில் அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் திறந்துவைக்கப்பட்டது.

இந்தத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்நிறுவனம் இலங்கையைப் பொறுத்தவரை புதியதொன்றாகும். இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்கு எம்மால் இயன்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவோம். அதேவேளை, சமாதானத்தை மலரச் செய்வதற்கான முயற்சிகளில் நாங்கள் தற்போது ஈடுபட்டுவருகின்றோம்.

யுத்த சூழல் காரணமாக உள்ளூரிலும் வெளியூரிலும் இடம்பெயர்ந்த நிலையிலுள்ள குடும்பங்களை மீண்டும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றோம்.

குறிப்பாக யுத்தகொடூரங்கள் காரணமாக இடம்பெயர்ந்து அல்லற்படும் மக்களுக்கு வேண்டிய இதர சேவைகளையும் வழங்கவுள்ளோம்.

இவ்வகையில், இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி அவர்களின் உதவியுடன் மக்களின் அவசிய தேவைகளை அறிந்து பணியாற்றவேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அதனை மேற்கொள்வதற்கான முன் முயற்சிகளில் எமது நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

எமது நிறுவனம் கடந்த வருடம் மே மாதம் இலங்கையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் கடந்த வாரம் கொழும்பில் இதற்கான பயிற்சி நிலையம் ஒன்றையும் ஆரம்பித்து வைத்துள்ளோம். இந்த வகையில் இந்நிறுவனத்தின் மூன்றாவது நடவடிக்கையாக இந்தப் பணிமனை இன்று திறந்துவைக்கப்படுகின்றது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் கண்ணியத்துடன் தமது சொந்த இடத்தில் - சொந்த சமுதாயத்தில் - சுதந்திரமாக வாழவேண்டும் என்பதில் எமது நிறுவனம் அக்கறை காட்டிவருகிறது.

ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்படுகின்ற மக்களும் தாமாக திரும்பி வரவிரும்புகின்றவர்களும் தமக்கு வேண்டிய ஒத்துழைப்புக்களையும் சேவைகளையும் இந்த நிறுவனத்தின் மூலம் பெற்றுகொள்ளமுடியும் - என்றார்.

இந்நிகழ்வில் புலம்பெயர்ந்த சர்வதேச நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பிரவுன்ஷன் மெக்ஹறன்லி நாடா வெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பதிலகநாயகம் போல், புலம்பெயர்ந்த சர்வதேச நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதான அமைப்பாளர் மேரி ஷீஹன், மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ஆர்பி.சந்திரசேகர, யாழ் செயலகத் திட்டப் பணிப்பாளர் புகழ்தரம்பிள்ளை மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சிவசுவாமி, வண.பிதா செல்வராசா அடிகளார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சர்வதேச தொண்டு நிறுவனங்களான செஞ்சிலுவை சர்வதேசக்குழு, சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெவ அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

## மின் தடைகுறித்து அறிவிப்பு

புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, அச்செழு மற்றும் வடமராச்சிப் பகுதிகளில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின் இணைப்புகளில் மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணிகள் முடிவுற்றதும் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாக -

எந்த நேரத்திலும்-மின் விநியோகம் இடம்பெறலாமென்று மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலக மின் பொறியியலாளர் தெரிவித்தார்.(எ-9)

## ஹாட்லிக் கல்லூரியில் பரிசளிப்பு விழா

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பரிசளிப்பு விழாவும் கல்லூரித் தினமும் இன்று காலை 9 மணிக்கு அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி இந்திராணி அருளாந்தன் பரிசில்களை வழங்குவார். (ஒ-3)

## நாளைய நிகழ்வுகள்

யாழ்நகர்மைய ரோட்டரக்ட் கழகம் நடத்தும் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாட வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இணைந்த கணிதம், இரசாயனவியல், உயிரியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களில் புலமை வாய்ந்தவர்களால் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

★ ★ ★

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டுவரும் யுத்தத்தைக் கண்டித்து சர்வதேச மார்க்ஸியக் குழு ஏற்பாடு செய்துள்ள அமெரிக்க யுத்த எதிர்ப்புக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். சிற்றி ஹோலில் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

## மண்டபத் திறப்பு

நாவற்குழி மகவித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட மண்டபத்தின் திறப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இந்த வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திரு அசெல்லத்துரை சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ-3)

# அமெரிக்காவின் போரைக் கண்டித்து திருமலையில்பேரணி, ஜும் ஆ தொழுகை

திருகோணமலை,ஏப்.5

ஈராக் மீதான அமெரிக்காவின் போரைக் கண்டித்து நேற்று திருகோணமலையில் மாபெரும் எதிர்ப்புப் பேரணியும், ஜும் ஆ தொழுகையும் இடம்பெற்றன.

புல்மோட்டை, கிண்ணியா, இறக்கக்கண்டி, ஜமாலியா, சோனகத்தெரு, குச்சவெளி, நிலாவெளி, இக்பால நகர், ஜின்னா நகர் எனப் 13 பள்ளிவாசல்களில் இருந்து ஆரம்பமான கண்டனப் பேரணிகள் பிற்பகல் 12.30 மணியளவில் திருகோணமலை பெரிய முற்றவெளி மைதானத்தை வந்தடைந்தன புஷ்ஷுக்கு எதிரான கோஷங்கள் பேரணியில் எழுப்பப்பட்டன. பதாகைகள், சுலோக அட்டைகள் என்பனவும் ஏந்திச் செல்லப்பட்டன.

பேரணியாகச் சென்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகத்தில் மகஜர் கையளிக்க பொலீஸார் அனுமதிதர மறுத்துவிட்டனர். எனினும், தொழுகையை அடுத்துப் பேரணி நகர் வலம் வந்தது. ஐக்கிய நாடுகள் சபை திருமலைக் கிளையிடம் மகஜர் கையளிப்பதாக இருந்த போதிலும், அந்த அலுவலகம் முன்கூட்டியே மூடப்பட்டுவிட்டதால் உரிய மகஜர் உதவி மாவட்டச் செயலாளர் நியாஸிடம் கையளிக்கப்பட்டது. இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச புஷ்ஷின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

தொழுகையில் திருகோணமலை மாவட்ட எம்பிக்களான கேஎம் தௌபீக், எம்.ஏ.எம்.மஃரூப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்றைய கண்டனப் பேரணிக்கும் எதிர்ப்பு ஊர்வலத்துக்கும் நகர வர்த்தகர்கள் பூரண ஆதரவு வழங்கியிருந்தனர். அதனால், நகரம் நேற்று ஸ்தம்பிதம் அடைந்துகாணப்பட்டது. (ஒ)

# அக்கரைப்பற்றில் கண்டனப்பேரணி

அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுப்படைகள் ஈராக் மீது தாக்குதல் நடத்தி வருவதை எதிர்த்து அக்கரைப்பற்றில் நேற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஜும் ஆ தொழுகையின் பின்னர் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

ஈராக் மக்களுக்காக து ஆப் பிரார்த்தனையும் நடத்தப்பட்டது. பெரும் எண்ணிக்கையான மக்கள் பேரணியிலும் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டனர்.

இந்த ஆக்கிரமிப்புப் போரை நிறுத்தக் கோரி அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில்

# எழுதுவினைஞர் போராட்டத்தால் நிர்வாகப் பணிகளில் பெரும்பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த இரு நாள்களாக நிர்வாகப் பகுதி எழுது வினைஞர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நிர்வாகப் பணிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

தொடரும் இப் போராட்டத்தினால் ஏனைய ஊழியர்களுக்கான இம்மாத வேதனம் உட்பட கொடுப்பனவுகளை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாளாந்த பணியினைச் செய்யும் ஏனைய தற்காலிக ஊழியர்களுக்கு இம்மாதம் 10 ஆம் திகதி வழங்கப்படவேண்டிய வேதனம் வழங்கப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டு விரைவில் வரவுள்ளது. இவ்வேளையில் வைத்தியசாலைப் பணியாளர்கள் தமது வேதனம் முடங்கியிருப்பதனால் பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்பட்டது.

சம்பள உயர்வு, பதவிப் பெயர் மாற்றம் போன்ற பல கோரிக்கைகளை முன் வைத்து அகில இலங்கை சுகாதார எழுதுநர் சேவைச்சங்க கூட்டமைப்பால் நடத்தப்பட்டுவரும் சுகவீன லீவுப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ். போதனா வைத்தியசாலையிலும் இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சரியான பதில் கிடைக்கும்வரை இப் போராட்டம், சுகவீனலீவு, சட்டப்படி வேலை எனத் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-139)

# புலி உறுப்பினர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை

## மனிதஉரிமை ஆணைக்குழு நடத்தும்

யாழ்ப்பாணம்,ஏப்.5

கொடிகாமம் - கச்சாய் வீதியில் கடந்த மாதம் 28 ஆம் திகதி விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் பொலீஸ் கான்ஸ்டபில் ஒருவரால் தாக்கப்பட்டதாகச் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணை நாளை மறுதினம் திங்கட்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறையினரால் சம்பவம் இடம்பெற்ற தினத்துக்கு மறுநாள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலீஸ் கான்ஸ்டபிளையும் கொடிகாமம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியையும் குறித்த தினத்தன்று விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

அரசியல் பணிக்காகச் சென்ற வேளையில் இசையாணன் என்ற விடுதலைப் புலி உறுப்பினரே தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-10)

சாவகச்சேரி யுவதி கடத்தல் வழக்கு:

# சந்தேகநபர்களில் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஏப்.5

சாவகச்சேரி பெரிய மாவடிப் பகுதியில் கடந்த 17 ஆம் திகதி இளம் பெண் ஒருவர் கடத்தப்பட்டு பின்னர் மயங்கிய நிலையில் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டார்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதில நதிவான் வ.கந்தசாமி முன்னிலையில் நேற்று இந்த அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. குறிப்பிட்ட இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட ஒருவரை பிரஸ்தாப இளம்பெண் அடையாளம் காட்டியுள்ளார்.

கச்சாயைச் சேர்ந்த தங்கராசா தவரூபன் என்ற அந்த நபரை எதிர் வரும் 17ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு நபர் பொலீஸாரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் உள்ளார். (ஒ-3-10)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.5

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர் வரும் 8 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 6.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.5

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாளகள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ-ரி)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் கொல்லங்கிராய் ஸ்ரீ வரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் காலை 9.00 மணிக்கு அபிஷேகமும் 11.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெறும். (ஒ-8)

★ ★ ★

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதா சுவாமி கோவில் வருடாந்த 1008 சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மாலைத் திருவிழாவாக தண்டிகை உற்சவம் இடம்பெறும். (ஒ-72)

# விளையாட்டு நிகழ்வுகள்

இணுவில்,ஏப்.5

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு உதவிப் பிரதேச செயலர் க.பீதாம்பரம் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டு விழாவில் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்ஜேரூபசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம.5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.5

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா இன்றும் நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் த.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மாவட்ட வைத்திய அதிகாரி க.கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். (ம-5)

★ ★ ★

கோப்பாய்,ஏப்.5

கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிறது. (ஒ-72)





ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் அமெரிக்கப் படையினர் நடத்திவரும் கடும் குண்டுத் தாக்குதலில் சிக்கி படுகாயமடைந்தான் அலி இஸ்மாயில் என்ற சிறுவன். அவனது இரு கைகளும் மிகமோசமாகச் சிதைந்துவிட்டதால், மருத்துவர்கள் அந்தப் பிஞ்சின் இரு கைகளையுமே அகற்றிவிட்டனர். அவன் காயமடைந்த அதே தாக்குதலில் அவனது குடும்ப உறுப்பினர்கள் 6பேர் பலியாகினர். காயமடைந்த இஸ்மாயிலின் படத்தை அருகில் காணலாம். அவன் கைகளை இழப்பதற்கு காரணமான போரின் மூலகாரணகர்த்தாவான அதிபர் புஷ், வடக்கு கரோலினாவில் உள்ள இராணுவக் குடியிருப்பில் ஈராக் போருக்குச் சென்ற சிப்பாய் ஒருவரின் குழந்தையைக் கொஞ்சும் காட்சியை மேலுள்ள படத்தில் காணலாம்.

# பக்தாத் சர்வதேச விமான நிலையம் அமெரிக்காவின் முழுக் கட்டுப்பாட்டில்!

பக்தாத்,ஏப்.5

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் இருந்து 12 மைல்கள் தொலைவில் தென்மேற்கில் உள்ள சதாம் சர்வதேச விமான நிலையம் அமெரிக்கப் படைகளின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.


அதிபர் சதாமை அகற்றுவதற்காக 16 நாள்களாகத் தொடரும் போரில் கூட்டுப் படைகளுக்கு கிடைத்த பெரிய வெற்றி இதுவென அமெரிக்கப் படைகளுடன் சென்றுள்ள செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"விமான நிலையத்தை நாம் முழுக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளோம். அது பெரிய பிரதேசம். பெருமளவு கட்டடங்களும் உள்ளன. அவற்றை சோதனையிட வேண்டியுள்ளது. அவை அனைத்தும் இப்போது எம்வசம் இருக்கின்றன" - என்றார், விமான நிலையத்தைக் கைப்பற்றிய அமெரிக்க 3ஆவது கவசப் படைப் பிரிவின் கேணல் ஜோன் பிபொடி.

கைப்பற்றப்பட்ட விமான நிலையத்தின் ஓடுபாதை நல்ல நிலையில் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

விமான நிலையத்தைக் கைப்பற்றுவதற்காக நடந்த சண்டையில் 320 ஈராக்கியப் படையினரைத் தாம் கொன்றுள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது. பல சடலங்கள் விமான நிலையத்தில் சிதறிக் கிடக்கின்றன. டசின் கணக்கான விமான எதிர்ப்பு ஆட்லறிகள், துருப்புக் காவி வாகனங்கள் மற்றும் ட்ரக்குகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என்றும் அமெரிக்கப் படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கத் தாக்குதலில் நொறுக்கிய விமானம்



விமான நிலையத்தை விட்டு ஈராக்கியர்கள் வெளியேறியபோதும் அதனை அண்டிய பகுதிகளில் அமெரிக்கப் படையினருக்கும் ஈராக்கிய குடியரசுப் படையினருக்கும் இடையில் கடும் சண்டை நடந்து வருவதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆட்லறிகளையும் டாங்கிகளையும் பயன்படுத்தி அமெரிக்கத் துருப்பினர் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். விமானங்களும் சரமாரியான குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.


விமான நிலையம் வீழ்ந்தது சதாமுக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் என பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். பக்தாத்தின் மீதான எதிர்கால நடவடிக்கைக்கு இந்த விமான நிலையம் அமெரிக்கர்களுக்கு பெரிதும் உதவும்.

ஏற்கனவே விமான நிலையத்தில் மேலதிக துருப்பினரை அமெரிக்கா தரையிறக்கிவருகிறது. அங்கிருந்து அவர்கள் பக்தாத் நோக்கி முன்னேறுகின்றனர். ஆங்காங்கே ஈராக்கியக் குடியரசுப் படையினருக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையே சண்டைகள் இடம்பெறுகின்றன.

பக்தாத்தின் வடமேற்குப் பகுதி கூட்டுப்படையின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டது. மொத்தத்தில் பக்தாத்தின் நாற்புறமும் அமெரிக்கப் படைகள் சுற்றிவளைத்த ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இன்னும் சிலவாரங்களில் பக்தாத்தின் இறுதி முடிவு தெரிந்துவிடும் என அமெரிக்கர்கள் கருதுகின்றனர்.

(ம)



## ஈராக்கில் போர் நிறுத்தம் உடனே ஏற்பட வாய்ப்பில்லை

### கோபி அனான் தெரிவிப்பு

ஈராக்கில் உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் கருத்துத் தெரிவித்தார்.

இது குறித்து அல்-ஜெஸீரா தொலைக்காட்சிக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்ததாவது:-

போர் நடவடிக்கைகள் அனைத்தும் மனித உயிரிழப்புக்கு வழிவகுக்கின்றன. போரில் ஈடுபடும் அனைத்துத் தரப்பினருமே பெரும் இழப்புக்கு ஆளாகின்றனர்.

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கவில்லை. எனவே, போரை சட்டபூர்வமாக ஆதரிக்க இயலாது.

ஈராக்கிலுள்ள பேரழிவு ஆயுதங்களை அழிக்க அமைதியான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆலோசனை.

ஈராக்கில் போர் முடிந்ததும் அங்கு மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளவேண்டிய முக்கிய பொறுப்பு ஐ.நா. சபைக்கு உள்ளது. இவ்வாறு அனான் கூறினார்.

## போர் தொடங்கிய பின்னர்

# முதற்றடவையாக பக்தாத் கடும் இருளில் மூழ்கியது!

பக்தாத்,ஏப்.5

ஈராக் போர் ஆரம்பித்த பின்னர் தலைநகர் பக்தாத் முதல் தடவையாக நேற்று இருளில் மூழ்கியது. கடந்த மாதம் 20ஆம் திகதி போர் ஆரம்பித்தது. அப்போது முதல் பக்தாத் மீது கடும் வான் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஆயினும் தற்போதுதான் பக்தாத்தில் மின் விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

அமெரிக்கத் தரைப் படையினர் பக்தாத் நகரை நெருங்கிவிட்ட நிலையில், விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சைத் தீவிரப்படுத்தின. நேற்று 200இற்கும் மேலான குண்டுகள் வீசப்பட்டதாகவும் - இதில் சுமார் 30 குண்டுகள் அதிசக்தி வாய்ந்தவையாக இருந்ததாகவும் ரொய்ட்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் குண்டுவீச்சு தொடங்கியதும் பக்தாத் நகர மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது. இதனால் நகரமே இருளில் மூழ்கியது. போர் தொடங்கிய பிறகு பக்தாத் நகரம் இருளில் மூழ்கியது இதுவே முதல் தடவையாகும்.

சதாமின் குடியரசுப்படையினர் மின்சாரத்தைத் துண்டித்ததாக அமெரிக்கா கூறுகின்றது. ஆனால், அமெரிக்கா படைகள்தான் மின் நிலையங்களை குண்டுவைத்துத் தகர்த்துவிட்டதாக ஈராக் குற்றம்சாட்டுகிறது. இதை அமெரிக்க இராணுவம் மறுத்தது. பொதுமக்களின் அடிப்படை வசதியைப் பாதிக்கும் வகையில் எந்த வித தாக்குதலும் நடத்தமாட்டோம் என்று அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே பக்தாத்தில் தண்ணீர் மற்றும் பால் விநியோகங்களும் துண்டிக்கப்பட்டன. இவற்றைத் துண்டித்தது. யாரென்று தெரியவில்லை. இதனால் பக்தாத் நகர மக்கள் கடும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர்.

ஈராக்கின் 3 ஆவது பெரிய நகரமான மோசுல் நகரம் மீதும் நேற்று அமெரிக்கப்படைகள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின இந்த நகரம் இதுவரையில்லாத குண்டு வீச்சை நேற்றுச் சந்தித்தது. ஈராக்கின் வடக்கிலுள்ள டோமிஸ், பயதா என்ற சிறு நகரங்கள் மீதும் நேற்று தாக்குதல் நடந்தது.

## சதாமின் அரண்மனைக்குள் கூட்டுப்படையினர் சோதனை!

சதாம் ஹுசைனுக்குச் சொந்தமாக பகதாத்திலும் புறநகர்ப்பகுதிகளிலும் 12இற்கும் மேற்பட்ட அரண்மனைகள் உள்ளன. இதில் 2 அரண்மனைகள் முற்றிலுமாக தரைமட்டமாக்கப்பட்டு விட்டன.

பக்தாத் மையப் பகுதியில் உள்ள புது அரண்மனை கடந்த ஒரு வாரமாக ஏவுகணை வீசி தாக்கப்பட்டு வருகிறது. சதாமை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்படுகின்றது.

இந்த நிலையில் பக்தாத் நகரின, வடக்குப் பகுதியில் தர்தர் எனும் இடத்தில் இருந்த அரண்மனையை நேற்றுமுன்தினம் அமெரிக்கப் படைகள் கைப்பற்றின. இந்த அரண்மனை சதாமின் சொந்த ஊரான திக்ரித் அருகில் உள்ளது.

ஓய்வு எடுக்க இந்த அரண்மனையை சதாம் பயன்படுத்தி வந்தார். அந்த அரண்மனையை அமெரிக்க வீரர்கள் அங்குல அங்குலமாகச் சோதனையிட்டனர். அப்போது பல முக்கிய ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

(ம)

உலகப் புகழ்பெற்ற இமாமி தயாரிப்புகள் இப்போது யாழ்.நகரிலும்!



# இமாமி

## நேச்சுரலி ஃபேயார் பேர்ல்ஸ்

**அசல் முத்துக்களும் பதினொரு அரிய மூலிகைகளும் அடங்கிய சிவப்பழகு கிறீம்.**
இதன் பலாபலனை நாலு வாரங்களில் நீங்கள் காண்பீர்கள்!
அழகிய மினுமினுப்பான ரோஜா நிற சருமத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்து விடுவீர்கள்!

✦ மற்றக் கறீம்களைப் போலல்லாமல் நேசுரல்ல ஃபேயர் பேர்ல்ஸ் கிறீமில் அசல் முத்துக்களும் மூலிகைகளும் அடங்கியுள்ளன. அது சருமத்தை அழகுபடுத்துகிறது. மேலும் இளமைத் தோற்றத்தையும் முத்துக்களின் ரோஜா நிற ஒளியையும் தருகிறது. அல்ட்ரா வயலெட் கதிர்களிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கின்றது. மாசுபட்ட சூழலுக்கு எதிராக இதமளிக்கும் வேலியாகப் பயன்படுகிறது. முதிர்ச்சித் தோற்றத்தைக் குறைத்து ஊட்டமளிக்கிறது.

✦ அசல் முத்துக்கள் விற்றமின் 'ஈ' கூடிய மூலிகைகள் இவற்றின் திடருபம்தான் ஜெல். இது சருமத்தை மிருதுவாக்கிப் போஷாக்கு அளிக்கிறது.




பவுடர்

கிறீம்

சோப்

சந்தைப்படுத்துவோர்:
***HARCOURTS(PRIVATE)LTD.***
**No:14, Station Road, Dehiwala.**



# ஹிமானி

## ஹிமானி கோல்ட் டர்மெரிக் கிறீம்

**24 கரட் தங்கத்துடனும் சிறந்த மூலிகைகளுடனும் கூடிய ஹிமானி கோல்ட் டர்மெரிக் கிறீம் மூன்று அற்புதவழிகளில் வேலை செய்கிறது.**

✣ தங்கத்துகள்களில் உள்ள மின் காந்த சக்தி சருமத்தை கருக்கச்செய்யும் நச்சுப் பொருள்களை அகற்றுகின்றது.

✣ சருமத்தின் ஈரத்தைப் பாதுகாத்து தேவையான சமச்சீர் ஈரத்தன்மையை உண்டாக்குகிறது.

✣ பழைமையை அகற்றி புதுமையை ஏற்கும் அதன் வேலைத்திட்டத்தால் உங்கள் சருமம் இளமையாக இயங்குவதோடு இளமையாகவும் விளங்குகிறது.

*இதன் பலன்:*
பொலிவுடன் பிரகாசிக்கும் மிருதுவான இணக்கமான, மென்மையான, சிவப்பான, மாசுமறுவில்லாத சருமம்.
தினசரி இரண்டுமுறை கிறீம் உபயோகிக்கவும்.
உங்கள் சருமம் மீண்டும் வன்மை பெற வாரம் இரு முறை ஜெல்லை உபயோகிக்கவும்.




யாழ்.முகவர்:
**JEGHAN PHARMACY**
**ஜெகன் பார்மஸி**
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021-2222194



# மங்களகரமான திறப்புவிழா

சித்திரபானு வருஷம் பங்குனி 22ஆம் நாள்
இன்று (05.04.2003) சனிக்கிழமை
காலை 9.00 மணி முதல் 9.38மணி வரை வரும் சுபவேளையில்
இல.16, A-9 வீதி, சாவகச்சேரி எனும் முகவரியில்

# சுமங்கலி



என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்க உள்ளோம். அத்தருணம் எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், வர்த்தகப் பெருமக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

*இல.16, A-9 வீதி,*
*சாவகச்சேரி.*

(16299)

சுமங்கலி
உரிமையாளர்.


## இதயத்தின் ஆழத்தில்
# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 22 - 03 - 1952



உதிர்வு 18 - 03 - 2002

## அமரர் சபாரத்தினம் மகாலிங்கம்

(சாலைப் பரிசோதகர் C.T.B.)

ஆண்டொன்று சென்றது
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டு பல சென்றாலும்
ஆறிடாது எம் துயரம்
ஆயிரம் உறவு இருந்தென்ன
அண்ணா நீங்கள் இல்லையே!

வாமதேவன் மகேந்திராணி
(தங்கை)

*சுவிட்ஸர்லாந்து.* (16320)


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையாளர்கள் சுயவிவரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம் :- ஆயப்பகுதி - நடுவப் பணியகம், கிளிநொச்சி.
காலம் :- 12.04.2003, மு.ப 10.00 மணி.
பணிநிலை :-

01. ஆய அலுவலர் (இருபாலாரும்)
02. ஆய உதவியாளர் (ஆண்கள்)
03. எழுதுநர் (ஆண்கள்)
04. தட்டெழுத்தாளர் (ஆண்கள்)
05. சமையலாளர் (ஆண்கள்)
06. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
07. பாதுகாப்புப் பணியாளர் (ஆண்கள்)
08. மொழிபெயர்ப்பாளர் (ஆண்கள்)

## கல்வித்தகைமை

பணிநிலை 01, 03 இற்கு க.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 02 இற்கு க.பொ.த. (சா/த) கற்றிருத்தல்.
பணிநிலை 04, இற்கு க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல்.
பணிநிலை 05 இற்கு உணவு வகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.
பணிநிலை 06 இற்கு 08 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 07 இற்கு தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.
பணிநிலை 08 இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக் கூடியவர் - எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

*சிறப்புச்சலுகை :- கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்து தரப்படும்.*

ஆயம்,
நிதித்துறை, தமிழீழம்.

(சி-27098)

உதயன்

## சர்வஜன வாக்கெடுப்பு அறிவிப்பால் எழுந்துள்ள சிக்கல்

சமாதானத் தீர்வுத் திட்டம் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றது என்ற அறிவிப்பை விடுத்ததன் மூலம் புதிய அரசியல் சர்ச்சை ஒன்றை தோற்றுவித்திருக்கின்றார் அரசமைப்பு விவகார அமைச்சரும் அரசுத் தரப்பு பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இந்த அறிவிப்பு அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல் அரசமைப்பு ரீதியாகவும் சர்ச்சைகளை தோற்றுவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

"தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறும் உதவும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர் அநேகமாக அடுத்த நான்கு, ஐந்து மாதங்களில் இது நடத்தப்படும்" - என்று தெரிவித்துள்ள அமைச்சர் பீரிஸ், தாம் நடத்த எண்ணியுள்ள சர்வஜன வாக்கெடுப்பு வகை குறித்தும் விளக்கியுள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்புகள் இரண்டு வகையானது.

ஒன்று - சட்டமூலங்கள் தொடர்பான 'கட்டுப்படுத்தும்' சர்வஜன வாக்கெடுப்பு (Binding Referendum on a Legislative Enactment).

மற்றையது - மக்கள் ஆலோசனை தொடர்பான 'கட்டுப்படுத்தா' சர்வஜன வாக்கெடுப்பு(Non Binding Consultative Referendum).

இதில் இரண்டாவது வகை - ஆலோசனை பெறுவதற்கான 'கட்டுப்படுத்தா' சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவே அரசு உத்தேசித்துள்ளது என்கிறார் அமைச்சர் பீரிஸ்.

அவர் குறிப்பிடுவதுபோல இரண்டு வகை சர்வஜன வாக்கெடுப்புக்கும் நமது அரசமைப்பில் இடம் உள்ளது என்பது உண்மைதான். அரசமைப்பின் 13ஆவது அத்தியாயத்தில் 85, 86 அவது பிரிவுகளில் இது விவரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பிரிவு 86இன் படி நாட்டின் முக்கியத்துவம்மிக்க ஒரு விடயத்துக்கு மக்களின் ஆலோசனையைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பை மக்கள் முன் வைக்கும் முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கே உண்டு.

ஜனாதிபதியுடன் அணியாலும் கருத்தாலும் முரண்பட்டு நிற்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு, ஜனாதிபதியின் ஒத்துழைப்பு - விருப்பம் - இணக்கம் - இல்லாமல் மக்கள் ஆலோசனைபெறும் சர்வஜன வாக்கெடுப்பை எப்படி நடத்தப்போகின்றது என்பது கேள்விக்குறி. - இது அரசமைப்பு ரீதியான சிக்கல்.

இதேசமயம், தம்மோடு கலந்தாலோசிக்காமல் - ஒருதலைப்பட்சமாக - சர்வஜன வாக்கெடுப்புத் தட்டத்தை அறிவித்துச் செயற்படுத்த அரசுத் தரப்பு முன்வந்திருப்பது புலிகளை கடுஞ் சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றது. - இது அரசியல் ரீதியான சிக்கல்.

தனது சர்வஜன வாக்கெடுப்புத் திட்டத்தை இந்த இரண்டு சிக்கல்களையும் தாண்டி அரசினால் முன்னெடுக்கமுடியுமா என்பது சந்தேகமே.

சமாதான முயற்சிகளில் - அமைதி நடவடிக்கைகளில் - கணிசமான முன்னேற்றம் காணாத நிலையில் சமாதான முயற்சிகளுக்கு மக்கள் அங்கீகாரம் பெறுவது என்ற பெயரில் இத்தகைய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தமுற்படுவது வெறும் அரசியல் 'ஸ்டண்ட்' என்றே புலிகள் கருதுவதாகத் தெரிகின்றது.

யுத்தத்தின் பேரழிவுகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்த ஓராண்டுகால அமைதி வேளையில் சமாதான முயற்சிகளின் பலன் ஏதும் கிட்டவில்லை. - உயிர், உடைமைச் சேதங்கள், இழப்புக்கள் தவிர்க்கப்பட்டதைத் தவிர.

அந்த நிலையில், அவசியமற்ற இந்த சர்வஜன வாக்கெடுப்பு இப்போது ஏன் என்ற கேள்வி புலிகள் மனதில் எழுவதில் தவறேதும் இல்லை.

சர்வஜன வாக்கெடுப்பு என்ற பெயரில் தேர்தல் ஒன்றை நடத்தி, அதன் மூலம் தென்பகுதி மக்கள் வடக்கு - கிழக்குக்கு வழங்க உத்தேசித்துள்ள அதிகாரப் பரவலாக்கலின் உச்ச எல்லை இதுதான் என்ற ஒரு வரையறையை - கட்டுப்பாட்டு எல்லையை - விதித்துக்கொள்ளவும், பேச்சுக்களில் பேரம் பேசும் விஸ்தீரணத்தை ஓர் எல்லைக்குள் முடக்கவும் அரசு திட்டமிடுகின்றதா? ஒருதலைப்பட்சமான சர்வஜன வாக்கெடுப்பு யோசனையை அரசு முந்திக்கொண்டு அறிவித்ததன் உள்நோக்கம் அதுதானா? - என்ற சந்தேகமும் தமிழர் தரப்பில் எழுந்துள்ளது. அதுவும் ஒதுக்கிவிடக்கூடிய ஒன்றல்ல.

## பெப்ரவரி மாத நிவாரணம் ஒருவாரத்தின் பின்பே விநியோகம்

### செயலக திட்டப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.5

இடம்பெயர்ந்த மக்களுக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய நிவாரணம் இன்னும் ஒரு வாரத்தின் பின்னர் விநியோகிக்கப் படும் என்று யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ஏப்ரல் மாதம் ஆரம்பமாகியுள்ளபோதிலும் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான நிவாரணம் இன்னமும் விநியோகிக்கப்படவில்லையே எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் ஒவ்வொரு மாதத்துக்கும் உரிய நிவாரணம் அந்தந்த மாதங்களிலேயே விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த சில மாதங்களாக அவ்வாறு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

போதிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாமை இதற்குரிய காரணங்களில் ஒன்று. அண்மையில் அரிசி கொள்வனவில் ஏற்பட்ட குளறுபடி மற்றும் திருகோணமலையில் இருந்து கோதுமை மாவினை லொறிகளில் எடுத்து வருவதில் ஏற்படும் தாமதமும் இதற்குக் காரணங்களாகும்.

தற்பொழுது ஜனவரி மாதத்திற்கான நிவாரண விநியோகம் கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெற்று வருகின்றது. (எ-10)

## 'புஷ்' மான்மியம்

உலகம் யாவையும் ஒழிக்க வல்லவன்
நிலவில் கால்வைத்த நீள் புகழ் கொண்டவன்
பலம்மிகு படைபலம் பாரினில் படைத்தவன்
நிலமிசை 'புஷ்ஷினை' நினைந்து வாழுவாம்

உலகின் தளபதி தானென உறுமுவான்
நிலை குலைந்திட நீண்டபோர் நடத்துவான்
பல்லாயிரம் உயிர்களை படுகொலை செய்தபின்
நல்லவர் நானென நவில்பவர் 'புஷ்ஷரே'

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்
எண்ணைக் கிணற்றில் 'புஷ்ஷர்' இட்ட தீ
மண் உலகினில் மாபெரும் கொடுமையே!

- விகடகவி.

## உண்மைக்கு மாறான தகவல் வெளியிடுவதை கண்காணிப்புக் குழு தவிர்க்கவேண்டும்!

### ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதி கோரிக்கை

உண்மைக்கு மாறான - ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவதை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) அமைப்பைச் சேர்ந்த த.சுபத்திரன்.

இது தொடர்பாக அவர் விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உண்மைக்கு மாறான - எந்த ஆதாரமும், அடிப்படையுமற்ற சில கூற்றுக்களை தொடர்ச்சியாகக் கூறிவருகிறது.

சீன மீனவர்களுடன், சுண்டிக்குளம் கடல் பகுதியில் மீன்பிடிப் படகு தாக்கப்பட்டதற்கு புலிகளுக்கோ இலங்கைக் கடற்படைக்கோ திட்டவட்டமாக சம்பந்தமில்லை என்று தெரிவித்த அதேவேளை, வேறு ஆயுதக் குழுக்களுக்கு சம்பந்தமிருப்பதாகத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

இதேபோல், கடந்த மார்ச் 31 அன்று 'லங்கா முடித்த' கபபல் திருமலைக் கடற்பகுதியில் வைத்து தாக்கப்பட்ட சம்பவத்தில் புலிகள் தாம் சம்பந்தப்படவில்லை என்று திட்டவட்டமாக மறுப்பதாகவும் -

எனவே, வேறு தமிழ்க் குழுக்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு பேச்சாளரான ரெல்ஹுசன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். மற்றைய தமிழ்க் குழுக்கள் என்று தெரிவித்தபடியால் இதற்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு எமக்கும் உண்டு.

இது மிகவும் பாரதூரமானதும், பாரபட்சமானதுமான குற்றச்சாட்டாகும். யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட உடன் வடக்கு - கிழக்கில் உள்ள சகல இயக்கங்களிடமிருந்தும் ஆயுதங்கள் அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், ஆன்மீகத் தலைவர்கள், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் அரசினால் திரும்பப் பெறப்பட்டன.

நிராயுதபாணிகளான - புலிகளை ஆதரிப்பன தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பாக, படுகொலைகள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. ஆனால், இப்போது கிழக்கில் சீன மீன்பிடிக் கப்பல், லங்கா முடித்த தாக்கப்பட்டதற்கு அநியாயத்திற்கு குற்றஞ்சாட்டுகிறார்கள்.

வடக்கு - கிழக்கின் கடற்பரப்பில் தமிழ்க்குழுக்கள் செயற்படுவதற்கு எந்தவோர் ஆதாரமோ அடிப்படையோ இல்லை. அப்படி ஒரு சிறு ஆதாரத்தைத் தானும் இவர்கள் பகிரங்கமாக சமர்ப்பிக்க முடியுமா? என நாம் வினவ விரும்புகிறோம். இது போதிய கல்வித் தகுதி உள்ள இலங்கையர் சமூகத்தை முட்டாளாக்கும் வேலையுமாகும். இப்போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நம்பகத்தன்மை தொடர்பான கேள்வி எழுந்துள்ளதாகவே கருதுகின்றோம்.

ஏனெனில், இலங்கையரசின் அறிவுக்கோ அல்லது சர்வதேச உள்ளூர் ஊடகங்களின் அறிவுக்கோ, இந்த நாட்டு மக்களின் அறிவுக்கோ எட்டாத விடயங்களை இந்த யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு கூறுகிறது. இவர்களின் இந்த நடத்தை எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இந்த நாட்டின் அரசும் பொறுப்புள்ள பிரஜைகளும் இது பற்றி கேள்வி எழுப்பவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏனெனில், இது மிகவும் பாரதூரமான விடயமாகும். அவர்கள் தமது கூற்றை நிரூபிக்கவேண்டும். இல்லையேல் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் என்பது எமது தாழ்மையான கருத்தாகும் - என்று அதில் உள்ளது. (எ)

## சமுர்த்தி முகாமையாளர் 8 பேர் ஏப்ரல் முதல் உள்ளக இடமாற்றம்

யாழ்.மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் எட்டுப்பேர் ஏப்ரல் முதல் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் பெற்றோர் விவரம் வருமாறு:-

யாழ்.செயலகத்தில் கடமையாற்றிய திருமதி ஜெ.சுகந்தி, திருமதி கு.கௌரி ஆகியோர் முறையே நல்லூர், கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கும், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி.சந்திரகாசன் சங்கானைப் பிரதேச செயலகத்துக்கும் கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.சிவகுமார் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கும் கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி புராஜினி யாழ். பிரதேச செயலகத்துக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி அ.யமுனா சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.பேமராஜ் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும் மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி.பாலாகரன் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஏ-86)

## உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே மீள்குடியேற்றம் தொடர்பான திருத்தச் சட்டம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

### நம்பியாரின் அறிக்கையின் பின்னரே அடுத்த நடவடிக்கை என்கிறார் பீரிஸ்

கொழும்பு,ஏப்.5

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே பொது மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான திருத்தச்சட்டம் ஒன்று அடுத்தமாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். ஆனால், ஜெனரல் நம்பியாரின் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கை கிடைக்கப் பெற்றதும்தான் மக்களை மீளக்குடியமர்த்துவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மீள் குடியேற்றங்களை மேற்கொள்ளும்போது, காணி உரிமை, காணிகளின் எல்லைகள் தொடர்பாகப் பல்வேறு சிக்கல்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. எனவே, இவற்றைப் பரிசீலனை செய்து காணி உரிமையாளர்கள், காணிகளின் எல்லைகள் தொடர்பாகப் பரிசீலனை செய்து தீர்மானிப்பதற்கென விசேட காணி ஆணைக் குழு ஒன்றை அமைப்பதற்கான திருத்தச் சட்டமும் சமர்ப்பிக்கப்படும்.

மீள்குடியமர்வுத் திட்டங்கள் தொடர்பாக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பற்றியும், மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படும் இடங்களையும் பார்வையிடுவதற்காக தமிழ் எம்.பிக்கள் குழு ஒன்று இம்மாதம் யாழ்ப்பாணம் செல்லவிருக்கின்றது என்று கூறிய அமைச்சர், அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு மேற்கொள்வது தொடர்பாக ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை கிடைத்த பின்னரே பரிசீலனை செய்யப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு மீண்டும் வேட்பு மனுவைக் கோருவது தொடர்பாகவும் திருத்தச் சட்டம் ஒன்று அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடத்துவதை எதிர்த்து வந்த விடுதலைப் புலிகள் இப்போது தமது எதிர்ப்பை வாபஸ் பெற்றுள்ளனர். எனவே, அப்பிரதேசங்களில் மீண்டும் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தல் நடைபெற்று ஒரு வருடத்திற்குள் பெறப்பட்ட வேட்பு மனுக்கள் ரத்துச் செய்யப்பட்டு புதிய வேட்பு மனுக்கள் கோரப்பட வேண்டும்.

இதற்கேற்ப தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் ஒன்று கொண்டு வரப்படும். ஜப்பானில் நடைபெற்ற ஆறாவது சுற்று சமாதானப் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட தற்கமையவே இவ்விரு திருத்தச் சட்டங்களும் சமர்ப்பிக்கப்படவுள்ளன - என்றும் அமைச்சர் கூறினார். (எ)

### நாளை

பங்குனி 23
ஞாயிற்றுக்கிழமை
(06.04.2003)
திதி: சதுர்த்தி
முற்பகல் 9.10 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
முற்பகல் 8.59வரை
சுபநேரம் :9.08 - 10.38
ராகுகாலம் : 4.38 - 6.08
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உண்பதும் குடிப்பதும் வயிற்றை நிரப்பலாம். ஆனால், பணப்பையைக் காலியாக்கி விடும்.

# வலுவிழந்தோரைப் பராமரிக்க கிராமம் தோறும் குழுக்கள் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ்.மாவட்டத்தில் வலுவிழந்தோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவர்களைப் பராமரிக்கவும் என கிராம அலுவலர் பிரிவு ரீதியாக குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்படும் குழுவில் அங்கம் வகிப்பவர்களில் ஒருவர் சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள வலுவிழந்தோரின் நலனைக் கண்காணிப்பதற்கென நியமனம் செய்யப்படுவார் என்றும் -

அவருக்கு சமூக சேவைத் திணைக்களத்தினால் மாதாந்தம் உதவுதொகைப் பணம் வழங்கப்படும் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் கிழக்கில் சேருவலை, கந்தளாய் ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் -

தற்போது யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்படுகின்றது என்றும் -

சமூக சேவைகள் திணைக்களம் விடுத்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

வலுவிழந்தோர் 'விசேட தேவைக்குரியவர்கள்' என பெயர் சூட்டப்பட்டுள்ளனர் என்றும் -

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-180)

## அறிவித்தல்

இரத்மலானை C.T.Bயில் 1987 இல் கடமை ஆற்றிய திரு.குமாரசாமி ஜெயப்பிரகாசம அவர்கள் இப்போது வசிக்குமட விலாசம், T.P. இலக்கம் தெரிந்த உறவினர்கள், நண்பர்கள் அதனைத் தந்துதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

*இல.418, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
***T.P : 021 222 3665***

வி.எஸ்.இராமநாதர்

(16336)

## பொதுக்கூட்ட அழைப்பு

கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி, சந்தன முதலிச்சிபுலம் ஶ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபையின் வருடாந்த பொதுக்கூட்டம் **எதிர்வரும் 20-04-2003** ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலய மண்டபத்தில் மாலை **5.00** மணிக்கு, சபைத் தலைவரின் தலைமையில் நடைபெறும். புதிய நிர்வாக சபைத் தெரிவும் அன்றையதினம் இடம்பெறும்.

பொதுச்சபை அங்கத்தவர்கள் யாவரும் சமுகந்தந்து ஒத்துழைப்பு வழங்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றார்கள்.

தா.இராசநாயகம் — தலைவர்
சு.சுந்தரேஸ்வரன் — செயலாளர்

(16259)

## காணத் தவறாதீர்கள், மரபு வழியில் ஓர் இசைநாடகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்மன்றத்தின் ஆதரவில் ஈழத்து முன்னணி இசைநாடகக் கலைஞர்கள், யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகத் தயாரிப்பில் இணைந்து வழங்கும்,

### "சத்தியவான் சாவித்திரி"

(இசை நாடகம்)

**இடம்:** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கம்.

**காலம்:** இன்று (05.04.2003) சனிக்கிழமை பி.ப. 3.00 மணி

**நிகழ்வுத் தலைமை:** பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள், (தலைவர், யா.நா.வ.கழகம்)

**நுழைவு அன்பளிப்பு:** மாணவர்கள் 25/=
பெரியோர் - 50/=, 100/=

(29.03.2003 திகதிக்குரிய நுழைவுச் சீட்டுக்கள் யாவும் 05.04.2003 நிகழ்வுக்குச் செல்லுபடியாகும்.)

யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம்,
யாழ்ப்பாணம்.

(16353)

கலைநிகழ்வினை வாழ்த்தி வழங்குவோர்:
**NEW SCIENCE HALL**
KANNATHIDDY ROAD, JAFFNA.

## குருநகரில் புதிதாக ஐஸ் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஏற்பாடு

குருநகர்,ஏப்.5

குருநகர் பகுதியிலுள்ள மீனவர்களுக்குத் தேவையான ஐஸ் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், குருநகர் கடற்கரைக்கு அருகில் உள்ள இடத்தில் பனிக்கட்டித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு வெளிநாட்டு நிறுவனத்தின் நிதியுதவி கிடைக்கவுள்ளது. என்றும்- இத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக குருநகரில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்களைச சேர்ந்த பிரதிநிதிகள் கொண்ட ஆலோசனைக்குழு நியமனம் செய்யப்பட்டுளளது என்றும்-தெரிவிக்கப்பட்டது. (எ-51)

## உள்ளூராட்சி அலுவலருக்கு கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்ற அலுவலர்களுக்கு திருகோணமலையில் வைத்து கணனிப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், பொறியியலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், புதிதாக நியமனம் பெற்ற எழுதுநர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் மேற்படி கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ்-ஆங்கிலம், சிங்களம்-ஆங்கிலம் என இருமொழிகளிலும் கூட்டாக பயிற்சி வழங்கப்படும்.(எ-185)

## அளவுக்கதிகமாக கள் வைத்திருந்த 5 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேல் கள வைத்திருந்தமை, அதனை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் ஐவருக்கு யாழ்நீதிமன்றினால் 5ஆயிரத்து 200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வில்லியம்ஸ் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த பாஸ்கரன் ஜெயகௌரி என்பவருக்கு ஆயிரம் ரூபாவும் -

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இராசன் மனோகரன் என்பவருக்கு ஆயிரத்து 200 ரூபாவும் -

யாழ்.அத்தியடி வீதியைச் சேர்ந்த கந்தசாமி சிவலட்சுமி என்பவருக்கு ஆயிரம் ரூபாவும் -

யாழ்.ஆறுகாலமடத்தைச் சேர்ந்த சனித்தம்பி பூமணி என்பவருக்கு ஆயிரம் ரூபாவும் -

குருகமதவடி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த துரைசிங்கம் ரூபசிங்கம் என்பவருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதமாகச் செலுத்துமாறு யாழ்நீதிமன்றப் பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை - அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் வைத்திருந்த குற்றத்துக்காக யாழ்.வெள்ளாந்தெருவைச் சேர்ந்த யோகராசா ஈஸ்வரி என்பவரை 2ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் 500 ரூபா தர்மப்பணமும் -

கொக்குவில், இராமநாதன் வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை பாஸ்கரன் என்பவரை 750 ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ-10)

# தலைமன்னாரில் மீன்பிடிக்க வியாழன்முதல் புதிய நடைமுறை

தலைமன்னார் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு நேற்றுமுன்தினம்முதல் புதிய கட்டுப்பாடுகளை கடற்படையினர் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின்னர் மீனவர்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், நேற்றுமுன்தினம்முதல் அனுமதிஅட்டை பெற்றே கடலில் தொழில்செய்ய முடியும் என்ற புதிய நடைமுறையை கடற்படையினர் தடிரென அமுலுக்கு கொண்டுவந்துள்ளனர்.

கடற்படையினரின் இந்தப் புதிய அறிவிப்பு மீனவர் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கடற்படையினரின் இந்த நடைமுறைப்படி அனுமதிஅட்டையைப் பெற்றுத் தொழிலுக்குச் செல்வதில்லை என மீனவர்கள் முடிவு செய்துள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயல் இது என மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3-164)

# கல்லுண்டாய் வயல்களில் கட்டாக்காலிகளால் 'எள்' நாசம்

நவாலி,ஏப்.5

கல்லுண்டாய், ஆனைக்கோட்டை, நவாலி பகுதியிலுள்ள வயல்களில் பல ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட எள்ளுப் பயிர் கட்டாக்காலி கால்நடைகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகளுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக ஒரு பகுதி பயிர்கள் அழிவடைந்து விட்டன என்றும் -

ஏனைய பயிர்களையும் கட்டாக்காலிகள் அழித்துவிட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி நவாலி, ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனங்களிடமும், பெரும்பாக உத்தியோகத்தரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-100)



வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் 30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தை அகதிகளுக்கான ஐ.நா. தூதராலய யாழ். வதிவிடப்பிரதிநிதி திருமதி மோர்க்கன் மொறிஸ் திறந்துவைத்தபோது எடுக்கப்பட்ட படம். யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஒ-36)

## அந்தியகால சகாயநிதிச் சங்கம்

**கட்டுவன் மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான்**

**47 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்**

*காலம்:* நாளை (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி
இடம்: வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், உரும்பிராய்,
தலைவர்: சாங்கத் தலைவர் திரு.பொ.சிவானந்தன அவர்கள

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி அன்பாக வேண்டப்படுகின்றனர்.

பொ.சிவானந்தன் — தலைவர்
வ.இராசதுரை, து.கலியுகவரதன் J.P. — இணைச் செயலாளர்கள்
சு.நவரத்தினம் — பொருளாளர்

(16340)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் நன்றி நவிலலும்



### அமரர் நாகப்பர் சின்னத்தம்பி

06.03.2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியமும், மதியபோசனமும் இன்று (05.04.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வேளை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவு கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், ஆறுதல் கூறி உதவி புரிந்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும தந்தி, தபால், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*புலவரோடை, வதிரி,*
*கரவெட்டி வடக்கு.* (16327)

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு


**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் பங்குனித் திங்கள் 23ஆம் நாள் நாளை (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 07.17 மணி முதல் 08.22 மணி வரையுள்ள கார்த்திகை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்,



**எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி**

### அனோஜினி



அவர்களுக்கு எமதில்லத்தில் பூப்புனித மங்கள நீராட்டு விழா நடத்த கன்னாதிட்டி காளியம்பாள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி சோ.நாகராசா
குடும்பத்தினர்.

**136/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**
**(கலைவாணி நகைமாளிகை)**

(16357)



மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் 55ஆவது பயிற்சிப் பாசறையில் இருந்து 400 ஆண் போராளிகளும் 30ஆவது பயிற்சிப்பாசறையில் இருந்து 300 பெண் போராளிகளும் இராணுவப் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர். இந்நிகழ்வு மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள தரவை மத்திய பயிற்சிப் பாசறையில் இடம்பெற்றது.

மூத்ததளபதி கேணல் கருணா அம்மான் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அணிவகுப்பை தளபதிகள் ஏற்றுக்கொள்வதையும் மகளிர் படையணியின் அணிவகுப்பின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

# இந்து கலாசார அமைச்சின் காசோலை பெறும் ஆலயங்கள், சமய நிறுவனங்களின் விவரம்

யாழ்ப்பாணம்,ஏப்.05

இந்து கலாசார அமைச்சினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காசோலை வழங்கப்படவுள்ள இந்து ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. விவரம் வருமாறு:-

நீர்வேலி தெற்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், அச்செழு அம்மன் கோவில், கோப்பாய், பலாணை கண்ணகை அம்மன் கோவில், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி கோவில், கரவெட்டி புளியங்கியான் பிள்ளையார் ஆலயம், வதிரி கனக சிங்கப் பிள்ளையார் ஆலயம் -

கபபூது வீரக்கத்திப் பிள்ளையார் ஆலயம், கரவெட்டி தெற்கு முங்கோடை முருகன் ஆலயம், கரணவாய் தெற்கு, முதலைக்குழி முருகமூர்த்தி ஆலயம், வேலணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் -

யாழ்.ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், கன்னாதிட்டி காளியம்மன் ஆலயம், தும்பளை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், சாவகச்சேரி ஆதி சிவவீரபத்திர சுவாமி ஆலயம், நுணாவில் கிழக்கு, கற்குழிக் கந்தசாமி கோயில் -

மட்டுவில் தெற்கு, வேரற்கேணி கந்தசுவாமி கோயில், சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், ஏழாலை மத்தி கண்ணகையம்மன் ஆலயம், மயிலணி ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில், உடுவில் குமரகோட்டம் முருகமூர்த்தி கோயில் -

கோண்டாவில் வடக்கு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், தாவடி, வேம்படி முருகமூர்த்தி கோயில், கொக்குவில் கோணாவளை ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், நல்லூர் ஸ்ரீபாலகதிர்காம ஆலயம், திருநெல்வேலி கிழக்கு சிவஞானப் பிள்ளையார் கோயில்,

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம், கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில், அச்சுவேலி, வளலாய் பெரிய நாகதம்பிரான் ஆலயம். அச்சுவேலி போதிப்பிள்ளையார் கோயில், பத்தமேனி தீர்த்தாங்குளம் விநாயகர் -

ஊரெழு மேற்கு சக்திபுரம் சிவபூரணி காளியம்பாள் ஆலயம், கோப்பாய் ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம, நல்லூர் ஸ்ரீ வாலையம்மன் ஆலயம், திருநெல்வேலி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், மல்லாகம் பெரியதம்பிரான் பெரியநாயகித் தாயர் ஆலயம்.

அளவெட்டி கணேஸ்வரம குருக்கள்கிணற்றடி விநாயகர் ஆலயம், அளவெட்டி கேணிக்கரை வைரவர் ஆலயம், யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலயம், யாழ்.மணிக்கூட்டு வதி அரசடி விநாயகர் ஆலயம், கரவெட்டி கப்பூது ஞானியார் வைரவர் கோயில் -

கரவெட்டி யார்க்கரு விநாயகர் ஆலயம், கரவெட்டி வடலித்தோட்டப் பிள்ளையார் கோயில், சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயம், கைதடி கைத்தறி ஒக்களை விநாயகர் ஆலயம், மீசாலை ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம், கெருடாவில் கந்தசுவாமி கோவில் -

சங்கத்தானை வைரவர் சுவாமி கந்தசுவாமி கோவில், கற்கோவளம் வீரபத்திரசுவாமி கோவில், நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் ஆலயம், நெடுந்தீவு, கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் -

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம், கந்தர்மடம் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம், ஏழாலை கிழக்கு அத்தியடி விநாயகர் ஆலயம், பத்தாவத்தை பண்டிதமணி மு. கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம்.

மருதங்கேணி பரமசிவன் கதிரேசன்கோயில், ஆவரங்கால் கன்னாரை அம்மன் ஆலயம், இளவாலை ஒல்லுடை அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை குருநாதசுவாமி கோவில், காரைநகர் சசிராந்தை ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் -

காரைநகர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம், கரவெட்டி கனகராவளவு பரமானந்த கணபதிப் பிள்ளையார் ஆலயம், வல்வெட்டி விநாயகர் அருள்கூர் சைவநூற் பதிப்பகம், கொடிகாமம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கம் -

யாழ்.புதிய உயர் கல்லூரி மாணவர் ஒன்றியம், துன்னாலை மேற்கு, ஞானவைரவர் ஆலயம், துன்னாலை வடக்கு ஞானவைரவர் ஆலயம், உடுப்பிடடி பகவதி அம்மன் கோயில், அல்வாய் தாமந்தோட்டம் திமிலிக்கண்டை ஞானவைரவர் ஆலயம் -

கரவெட்டி கிழவிதோட்ட விநாயகர் ஆலயம், இமையாணன் விஸ்வகுல விநாயகர் ஆலயம், கரணவாய் உச்சிப் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம, துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம். கரவெட்டி கபபூது காட்டுக் கந்தசுவாமி ஆலயம் -

தேவரையாளி நரசிம்ம கதிர்காம ஆலயம், உடுப்பிட்டி சந்திரசேகரா வரபத்திர சுவாமி கோவில், துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் ஆலயம், வல்வெட்டித்துறை மானாங்கானை ஸ்ரீ பராசக்தி அம்பாள் ஆலயம் -

துன்னாலை ஆயில் நின்றொல்லை விநாயகர் ஆலயம், கரணவாய் வடக்கு எள்ளங்குளம்பதி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், இமையாணன் வல்லைவாளி ஸ்ரீ சிதத்திவிநாயகர் ஆலயம். இமையாணன் நாவலடித்திடல் பதத்திரகாளி அம்பாள் ஆலயம், கொற்றாவத்தை ஸ்ரீ ரமணன் ஆலயம், பருத்தித்துறை மருதடி ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி ஆலயம் -

தும்பளை மேற்கு பெரியவளவு ஸ்ரீவரத விநாயகர் ஆலயம், மேலைப் புலோலி வர்ணர் குடியிருப்பு சொக்கன் கலட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயம், பருத்தித்துறை பண்ணையம்பதி இராஜேஸ்வரி அம்மன் திருக்கோயில் -

பருத்தித்துறை சுப்பர்மடம் முனீஸ்வரர் ஆலயம், பருத்தித்துறை மாதனை ஸ்ரீ காளியம்மன் ஆலயம், புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் ஆலயம். தொண்டமனாறு வரமாகாளியம்மன் ஆலயம், அல்வாய் நாவலடி பெரியதம்பிரான் ஆலயம், துன்னாலை வடக்கு வல்லியானந்தம் சனசமூக நிலையம்.

வதிரி தமிழ் மன்றம், வதிரி டைமன் விளையாட்டுக் கழகம், வட்டுவத்தை சனசமூக நிலையம், தேவரையாளி சனசமூக நிலையம், தேவரையாளி பாலர் பாடசாலை, ஜங்லைன்ஸ் விளையாட்டுக் கழகம், புலோலி மத்தி அல்லொல்லைப் பிள்ளையார் கோயில், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் -

நல்லூர் மூத்த விநாயகர் ஆலயம், அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலய இந்து மன்றம், ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை இந்து மன்றம், அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை இந்து மன்றம், பண்டத்தரிப்பு பல்லசுட்டி காந்திஜீ சனசமூக நிலையம், தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், சக்தி முன்பள்ளி, பொன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதகல் அம்மன் கோயில் காந்தி சனசமூக நிலையம், இளவாலை பொருளாதார கலாசார வளர்ச்சிச் சங்கம் -

மாதகல் கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்கம், இளவாலை சித்திரமேழி பழனி ஆனந்தன் சனசமூக நிலையம், இளவாலை மாரீசன் கூடல் கலைப்பராகிரி சனசமூக நிலையம், இளவாலை மாரீசன்பதி புனித கைத்தார் சனசமூக நிலையம். இளவாலை உயரப்புலம் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் -

இளவாலை புனித யூதாததேயு சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை உயரப்புலம் மெ.மி.த.க.வித்தியாலய இந்து மன்றம், மாதகல் புனித சகாய மாதா பாலர் பாடசாலை, மாதகல் வளர்மதி கலாலயம், மாதகல் வளர்மதி கலாலய சனசமூக நிலையம்-

மாதகல் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், பொன்னாலை ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத பொன்னம்பலவாண சுவாமி கோயில், நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி ஆலயம், மீசாலை மேற்கு, இலந்தைக்கூடல் வீரகத்திப் பிள்ளையார் கோயில், கொடிகாமம் அரசினர் வித்தியாலய இந்து மன்றம் -

உசன் இந்து இளைஞர் மன்றம், சரசாலை இந்து மன்றம், கொடிகாமம் அம்பலத்தாடி வைரவர் கோயில், மட்டுவில்வடக்கு ஸ்ரீ மகாமுத்துமாரியம்மன் ஆலயம், மறவன்புலோ மேற்கு சிதம்பர சித்தி விநாயகர் ஆலயம் -

கெற்பேலி கரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயம், கொடிகாமம் பாதாள வைரவர் ஆலயம், எழுதுமட்டுவாழ் மருதங்குளம் ஸ்ரீ மகா கணபதிப் பெருமாள் ஆலயம், கொடிகாமம் மருதடி விநாயகர் ஆலயம், கொடிகாமம் பாலாவி பத்திரகாளியம்மன் ஆலயம் -

நுணாவில் கிழக்கு பூரண புஸ்கல சமேத ஹரிஹரபுத்திர ஆலயம், கொடிகாமம் பாலாவி வடக்குப் பிள்ளையார் ஆலயம், கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், நாவற்குழி தெற்கு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம், மந்துவில் மேற்கு கும்பாவெளிப் பிள்ளையார் ஆலயம் -

கச்சாய் புங்கடி விநாயகர் ஆலயம், கோவிலாக்கண்டி தான்தோன்றி ஞானவைரவர் கோயில், கைதடி இயத்தை அண்ணமார் ஆலயம், மிருசுவில் சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலயம், வரணி சாவிலிட்பிட்டி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் -

குருநகர் புனித செபஸ்தியார் சனசமூக நிலையம், நல்லூர் சுவாமி சிவானந்த முத்தானந்த சரஸ்வதி, வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம், வண்ணார்பண்ணை பாரதியார் சனசமூக நிலையம், மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம்.

கரணவாய் தெற்கு துர்க்கைப் புலகலட்டி விநாயகர் ஆலயம், கரவெட்டி கல்லுவம் பிள்ளையார் கோயில், கரவெட்டி செட்டிக் குடியிருப்பு வைரவர் கோயில், கரணவாய் மத்தி இளைஞர் விளையாட்டுக் கழகம், கரவெட்டி விபுலானந்த சனசமூக நிலையம் -

ஊர்காவற்றுறை ஸ்ரீ ஆதிவைரவர் ஆலயம், ஊர்காவற்றுறை ஸ்ரீ காளிகா புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், நாரந்தனை வடக்கு பண்டாரக்குளம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் -

காரைநகர் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயம், ஊர்காவற்றுறை புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயம் -

குப்பிழான் விக்கினேஸ்வரர் விளையாடடுக்கழகம், உடுவில் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கம், தொண்டமனாறு தொட்டில் கந்தசாமி கோயில், சுன்னாகம் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் இந்து மன்றம், உரும்பிராய் றோ.த.க. பாடசாலை இந்து மன்றம் -

உடுவில் மல்வத்தை றோ.க.த.க. பாடசாலை, பொலிகண்டி சல்லியம் பதி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கம், இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக்கழகம், பொலிகண்டி செம்மீன் சனசமூக நிலையம்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் அம்பாள் சனசமூக நிலையம், அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையம், நாவாந்துறை கலைவாணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மாதகல் ஞானவைரவர் ஆலயம்.

(எ-6)

## பாவனைக்குதவாத பொருள்கள் மானிப்பாயில் கண்டுபிடித்து அழிப்பு

### கடந்த புதனன்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.5

மானிப்பாய் நகரில் மனித பாவனைக்கு உதவாத ரூபா 30 ஆயிரம் பெறுமதியான மருந்து மற்றும் உணவுப்பொருள்கள் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மானிப்பாய் நகரில் இடம்பெற்றுள்ளது.

ஐந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்தத் திடீர்ப் பரிசோதனையை மேற்கொண்டனர்.

பேக்கரிகள், பார்மஸிகள், பலசரக்குக் கடைகள் என 20இற்கும் மேற்பட்ட கடைகளில் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகளவில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த 8 கடை உரிமையாளர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

நீண்டநாள்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திடீர்ப் பரிசோதனையில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான த.ரவிதர்மா, வை.தயாமோகன், பொ. மனோகரன், பி.ஜோதீபன், எஸ்.திருநிறைச்செல்வன் ஆகியோர் பங்குகொண்டனர்.

(எ-185)

## இறைவனில் இணைந்திருப்போம்

*'என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராய் இருக்கின்றான். தனக்குள் தனக்கு எதிராக பிளவுபடும் எந்த அரசும் பாழாய்ப்போகும்'*

நாம் இறைவனின் மந்தையிலுள்ள ஆடுகள். எம்மால் தனித்து இயங்க முடியாது.

**தவக்காலச்சிந்தனை**
**-32ஆம் நாள்-**

தனித்தனி உறுப்புக்களாய் இருந்தபோதிலும் அவை தனித்தே இயங்கமுடியாது. ஒன்றில் ஒன்று இணைந்தே இயங்கும். அவ்வாறே இறைவனில் நாமும் இனங்காணப்பட்டுள்ளோம். இறைவனை விட்டு நீங்கிச் சென்றால் நாம் அழிவையே சந்திக்க நேரிடும்.

**பூ.ஜெயவதனி**

இறைவன் நமது பாதுகாப்பாளராய் நம்மிடையே இருக்கின்றார். இறைவனைச் சார்ந்திருந்தால் உலக மாயைகளில் இருந்து பாதுகாக்கப்படுவோம்.

*'நல்லவனே நாயகனே உன்னடி சரணம்!*

*காக்கும் வல்லவனே உன் காலடி தொடர்வோம்.'*

## அச்சுவேலிப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

அச்சுவேலி,ஏப்.5

அச்சுவேலிப் பகுதியில் அண்மைக் காலமாக பட்டப்பகலில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துள்ளதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கடந்தவாரம் இப்பகுதியில் பட்டப் பகலில் இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. பாண், பிஸ்கட் வகைகள் விநியோகிக்கப்பயன்படுத்தப்படும் சைக்கிள் ஒன்று பெட்டியுடன் பேக்கரி வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமயம் திருடப்பட்டுள்ளது. பாண் பெட்டியை இறக்கி வைத்துவிட்டு சைக்கிள் அபகரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் அச்சுவேலி தோப்பு இரத்தினா பேக்கரியில் நடைபெற்றது.

அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள வீட்டில் சைக்கிளை நிறுத்திவிட்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு பஸ்ஸில் சென்று திரும்பும் பயிற்சி ஆசிரியையின் சைக்கிள் ஒன்றும் பகல் வேளையில் திருடப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த காலங்களில் பாடசாலை நேரத்தில் பாடசாலை வளவில் இருந்தும் சில சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் பற்றி அச்சுவேலி பொலீஸாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளன. (ம-11)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Ceynor பைபர் கிளாஸ் நீளம் 34 1/2' x10 1/2' அகலமான வள்ளம் விற்பனைக்குண்டு. எஞ்சின் யன்மார், 3 சிலிண்டர் S.M.3 மொடல், 45HP (Lord Hear) பயணிகள் லோஞ்சுக்கு உகந்தது. தொடர்பு: குஞ்சணணை, வேம்படி, வல்வெட்டித்துறை.(16305)

பாவித்த திண்டுக்கல் இரும்புப் பெட்டி 4 அடி உயரம், 3அடி அகலம நகைக்கடைக்குரிய சோக்கேஸ் மற்றும் கவுண்டர் மேசை என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.மதீஸ் இல.213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.222-2863 (16361)

14மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் பெண் நாயும், கறுப்பு, மண்ணிறம், வெள்ளை பொமேரியன் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நடராசா, ஜெயராஜ், செல்வநாயம் ஒழுங்கை, பலாலி றோட், சந்திப்பிள்ளையார் கோவில் அருகில், கோண்டாவில் கிழக்கு. (16221)

## இறைச்சிக்கோழி

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு). (16359)

புறொயிலர் Kg 120/- சுத்தம் செய்தல் இலவசம் மான்ஸ் பாடசாலை வீதி, டச்றோட், உடுவில். (16333)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 10-04-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டிப் பதிவுசெய்யவும். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (நல்லூர் வீடியோ. சென்ரர் வளவு). (16358)

## வீடு விற்பனைக்கு

"சித்திரகிரி", சூராவத்தை, சுன்னாகம் என்ற இடத்தில் Attach Bathroom உடன் கூடிய 5பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவலிங்கம் (J.P.) ஏழாலை மேற்கு, ஏழாலை. (16301)

பழைய இல.192, புதிய இல.472 மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணையில் ஐந்து அறைகளுடன் நவீன வீடு விற்பனைக்குண்டு. நேரில தொடர்புகொள்ளவும். (16354)

## வீடு/காணி தேவை

யாழ்.மாநகரசபையை அண்டிய பிரதேசங்களில் 2 பரப்பிற்கு மேற்பட்ட வீட்டுடன் கூடிய காணி அல்லது வெற்றுக்காணி தேவை. (நாவலர் வீதி, கச்சேரி - நல்லூர் வீதி, கண்டி வீதி, கோயில் வீதி விரும்பத்தக்கது). தொடர்பு: விளம்பர இல. 1839, மே/பா உதயன் (16323)

## தவறிவிட்டது

க.மணிராஜா என்பவரின் கையடக்கத் தொலைபேசி செவ்வாய்க்கிழமை (01.04.2003), யாழ்.நகரில் இருந்து கைதடி சாவகச்சேரியூடாக கொடிகாமம் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.83/7, எப்ராஸ்பி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். T.P. 021 222 2521, 021 222 2216 தகுந்த சன்மானம் வழங்கப்படும். (16279)

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த L.R.பெற்றினா ஜெயந்தினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.688451175V), விசேட அடையாள அட்டை என்பன யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (16321)

**ENGLISH CLASSES**

தரம் 6 மாணவர்களுக்கான
சகல பாடங்களும்
ஆங்கிலத்தில்
கற்பிக்கப்படும்.
உடன் ஆரம்பம்
**16, சோமசுந்தரம் அவனியு,**
(16364) சுண்டுக்குளி.

---

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

## பொதுக்கூட்டம

இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 27-04-2003 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.30

காலை நிகழ்வு மு.ப.9.00 மணி

**பழைய மாணவர் எதிர் தற்போதைய மாணவர்**
*கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட, கிரிக்கெட் போட்டிகள்*

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 20-04-2003 பிற்பகல் 4.00 மணிக்கிடையில் சமர்ப்பிக்கவும்.

புதிய அங்கத்துவம் பெறுவோர் தொடர்பு கொள்ளவும். பொதுக்கூட்ட மதியபோசனவிருந்தில் பங்கேற்கவிரும்புவோர் கல்லூரி அலுவலகத்தில் 100/- (நூறு) செலுத்தி பதிவை மேற்கொள்ளவும்.

ந.சிவகடாட்சம் — தலைவர்
01-04-2003
ஆ.ஜெயபாலசிங்கம் — செயலாளர்

(சி-27135)

---

# அனுதாப அஞ்சலி

## அமரர் சுப்பையா இராமலிங்கம்

*(ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்)*

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சமூகசேவையாளரும் கிராம முன்னேற்றச் சங்க ஆரம்ப கால செயலாளரும் கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான தர்ம கர்த்தா சபையின் முன்னாள் செயலாளரும் ஆகிய சு.இராமலிங்கம் அவர்களின் அமரத்துவச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த துயரமும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் அல்லலுறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா சாந்திபெற்று மேனிலையடைய கந்தவேல் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

(16362)
பரிபாலன சபை உறுப்பினரும்
கைதடி வாழ் மக்களும்.

---

# ஈரவிழிகளுடன் ஓராண்டு

அன்னை மண் சிறக்க
17 - 07 - 1965



மண்ணைக் கண் நனைக்க
18 - 03 - 2002

## அமரர் குமாரசாமி ஜீவதாசன்

திதி: 05-04-2003

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன...
ஆறுதல் சொல்ல அப்பா இல்லையே!

தங்கள் நினைவில் வாழும்:
பாசமிகு மனைவி, அருமை மகள் சித்ரா - தாட்சாயினி
குடும்பத்தினர்.

*பிடாரி கோவிலடி,*
*ஆனைக்கோட்டை.*
(16363)

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
09 - 11 - 1938



உதிர்வு
08 - 03 - 2003

அமரர்

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

08.03.2003 அன்று இறைபதமடைந்த வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (05.04.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'கமலை',
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(16366)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

## கார்த்திகேசு சந்திரராசா (S.L.A.S.)

*(ஓய்வு பெற்ற பிரதேச செயலர், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை; திட்ட இணைப்பாளர் UNHCR)*

| விண்ணிலிருந்து மண்ணுக்கு | மண்ணிலே மாணிக்கமாய் | மண்ணிலிருந்து விண்ணிற்கு |
|---|---|---|
| 30 - 01 - 1939 | 64ஆண்டுகள் | 19 - 02 - 2003 |

நீதி,நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, எம்மையெல்லாம் வையத்தே முந்தியிருப்பச்செய்து, மன்னுயிரைத் தன்னுயிர் போற் போற்றி வானுறையுந் தெய்வமாகி விட்ட, எமது பாசமிகு குடும்பத் தலைவரை இன்று நெஞ்சார நினைவு கூர்வதுடன்-

நாளை (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஓம்சாந்தி!

*9. "இராஜஸ்தான்",*
*பறாளாய் வீதி,*
*சுழிபுரம்.*
(16370)

இவ்வண்ணம்:
குடும்பத்தினர்

---

# 29ஆம் நாள் நினைவஞ்சலி



## வேலுப்பிள்ளை சின்னத்துரை

*(முன்னாள் கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதிபதி, சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)*

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09-11-1938 | 08-03-2003 |

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே, எங்கள் இயலாமைக்காலத்தில் உன் துணையை நம்பியல்லவோ இறுமாந்திருந்து விட்டோம். படுமரமாய் நாமிருக்க பசுந்தளிராய் இருந்த நீ எமை விட்டு முந்திச் சென்றதேனோ? இப்பிறப்பில் எங்கள் எல்லோரிலும் இளையோனாய்ப் பிறந்தும் மூத்தோனாய் எங்களை வழிநடத்தி நல்வாழ்வு காட்டியது போதாதென்று மறுபிறப்பில் எங்கள் அண்ணனாகவே பிறந்து இன்னும் கூடுதலான உதவிகள் செய்யலாம் என்று எண்ணி முந்திச் சென்றனையோ? உன் அந்தராத்மா என்றென்றும் எம்மை வழி நடத்துவதாக!

உன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:
வே.தம்பையா (அண்ணா),
இ.பொன்னம்மா (அக்கா),
க.பாக்கியம் (அக்கா),
மனோன்மணி மகாலிங்கம்

*வாதரவத்தை,*
*புத்தூர்.*
(16355)

# ஜெனரேட்டர்கள்

உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க

ஹொண்டா (HONDA) ஜெனரேட்டர்கள்.

**650w, 1000w, 1200w, 1600w, 2600w**

வீடுகள், காரியாலயங்கள், ரெஸ்ரோரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சரிகள், தோட்ட பங்களாக்கள்..... இன்னும் பல

கையிருப்பு சொற்பமே

உடனடி விற்பனைக்கு உண்டு.

**GENERAL EQUIPMENTS LTD**

316, 400, Sri Sangaraja Mawatha, Colombo -12

Tel: 345046, 327264, 343822, 430799, Fax: 434637

(C/27073)



யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை

## கணனியகம் திறப்பு விழா

காலம்: நாளை (06.04.2003) ஞாயிறு

பிற்பகல் 3.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சபை.

(16239)

விளம்பர அனுசரணை:

**அம்பாள் வெதுப்பகம்,**
வல்வெட்டித்துறை.


## சீருடை முத்திரைகளை பெறுமாறு கோரிக்கை

கோப்பாய்,ஏப்.5

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில மாணவர் சீருடை முத்திரைக்கு விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் ஒரு தொகுதி முத்திரைகள் கோப்பாய் பிரதேச செயலகத்தில் உள்ளன என்றும் -

மீளக்குடியமர்ந்த மாணவர்கள் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில சீருடை முத்திரையைப் பெறவில்லை என்ற உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சமுகம் தந்து முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என கோப்பாய் பிரதேசசெயலர் அறிவித்துள்ளார்.(எ-72)

## கட்டாக்காலி நாய்களால் பாதசாரிகள் சிரமம்

வட்டுக்கோட்டையில் உள்ள பல்வேறு வீதிகளிலும் இரவு வேளைகளில் கூடும் கட்டாக்காலி நாய்களால் பாதசாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளில் வருவோரை துரத்திச் செல்லும் நாய்கள் வீதியின் இருமருங்கும் மாறிமாறி ஓடுவதாகவும்-

இதனாலேயே விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு கட்டாக்காலி நாய்களை அழித்து, வீதி விபத்துக்களிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(எ-14)

## அறநெறிப் பாடசாலையின் நூல் வெளியீட்டு விழா

வலிகாமம் தெற்கு, ஏப்.5

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்படும் அறநெறிப் பாடசாலையினர் 'மருதடியான் மலர்' என்ற நூலினை நாளை ஞாயிற்றுக்கிழமை வெளியீடு செய்ய உள்ளனர்.

மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் காலை ஒன்பது மணிக்கு, சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் நூல் வெளியீடு இடம்பெறும்.

ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் த.சிதம்பரநடராசா வாழ்த்துரையும், சண்டிலிப்பாய் பிரதேச கலாசார அலுவலர் செல்வி பத்மராணி நாகராசா பாராட்டுரையும் வழங்குவர்.

பதிப்பாசிரியர் செல்வி கா.லிங்கராஜியின் உரையைத் தொடர்ந்து இந்துசமய விவகார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.

நூல் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் சி.சிவசரவணபவன் (சிற்பி) நிகழ்த்துவார்.

அறநெறிப் பாடசாலையால் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசில்கள் சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் எஸ்.செல்வராஜாவினால் வழங்கப்படும். (எ-152)

## மூதாட்டியிடம் சங்கிலி அபகரிக்க ஏழாலையில் முயற்சி!

மல்லாகம்,ஏப்.5

வயோதிப மாதுவிடம் தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்ற இரு நபர்கள் பிரதாபப மாது கூக்குரலிடவே தப்பி ஓடினர். ஏழாலை - குப்பிளான் பிரதான வீதியில் அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குப்பிளான் வீரமனைப் பகுதியைச் சேர்ந்த து.வள்ளியம்மை என்ற மூதாட்டியிடமே சங்கிலி அபகரிப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.(எ-45)


யாழ். மக்களின் நலன் கருதி

**ஸ்ரீ கல்கி பகவானின் ஸ்வர்ணயுக அமைப்பகம் வழங்கும்**

## ஐஸ்வர்ய ஹோமம்

இடம் :- ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் மண்டபம்
(பெருமாள் கோயில் அருகில்)
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

நேரம் :- மாலை 5 மணி - 8 மணிவரை.

காலம் :- பங்குனி 23 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (6.4.2003)

நடத்துபவர்கள் :- ஸ்ரீகல்கி பகவானின் சீடர்கள்
ஸ்ரீ ராஜேஷ் பகவத் தாஸா
ஸ்ரீ சுஜய் பகவத் தாஸா

ஹோமம் என்பது ஒரு புனிதமான அக்னி வேள்வி. இயற்கை நமக்கு அளித்துள்ள வலுவான உந்துசக்திகளை, எமக்கு சாதகமான நற்பலன்களைப் பெறுவதற்கும், எங்கள் விருப்பங்கள் நிறைவேற்றப்படவும் மற்றும் ஆன்மீக வழியில் எம்மை வழிப்படுத்துவதும் ஹோமத்தின் செயற்பாடாகும்.

ஹோமம் அடிப்படையில் பூமியை மாற்று நிலைப்படுத்தி அதன் பிரகாரமாக சத்காமம் பெற உதவும். அத்துடன், முழு மனித சமுதாயத்திற்கும் அவரவா தனிப்பட்ட வாழ்வில் பலவிதமான மங்கள சம்பவங்கள் ஏற்பட அனுக்கிரகிக்கும். பக்தர்கள் கூட்டாகச் சேர்ந்து இகஹோமத்தில் பங்குபற்றும் வேளையில, ஹோமம் மேலும் வலுவடைந்து அதி அற்புதமான நிகழ்வுகளைத் தோற்றுவிக்கும். ஹோமங்களில் மிக சக்திவாய்ந்த ஹோமங்களில் ஐஸ்வர்ய ஹோமம் ஒன்றாகும்.

*ஐஸ்வர்ய ஹோமத்தின் பலாபலன்கள்*

- ☆ சகல விதமான சுபீட்சத்தை வழங்கும். *(செல்வம், சுகம், நல்ல உறவுமுறைகள், ஆன்மீக வளர்ச்சி ஆகியவை இவற்றுள் அடங்கும்.)*
- ☆ ஆன்மீக முன்னேற்றத்துக்கும், உலகியல் வாழ்விற்குமான தடைகளை முற்றாக நீக்கும்.
- ☆ பரந்த முறையில் நோய் நிவாரணம் அளிக்கும்.
- ☆ ஸர்வ முயற்சிகளிலும் வெற்றி கிட்டும்.

இப்புனித வேள்வியில் கலந்து அதன் பலாபலன்களைப் பெற்று உய்யுமாறு எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

★ ஐஸ்வர்ய ஹோமத்தில் பங்குபற்றும் பக்தர்கள் இத்தினத்தில் புனிதம் பேணி இந் நற்கருமத்திற்காக இந்நாளை அர்ப்பணிக்கும்படி பணிவுடன் வேண்டப்படுகின்றனர்.

அனைவரும் வருக! அருளைப் பெறுக!

அனுமதி இலவசம். (சி-27117)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள்

1. நுண்கலைமாணி (சங்கீதம்) - 2000
   1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்
2. நுண்கலைமாணி (நாட்டியம்) - 2000
   1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட பரீட்சைகள்

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றவிரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 50/-இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி, விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெறவிரும்புவோர் மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகக் கிளை, கணக்கு இலக்கம் 90503இல் ரூபா50/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீள் தபால் உறையுடன் *'உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்'* என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 21.04.2003 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

புதிய கட்டண விவரம்:

முதன்முறை பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா 1000/- ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 200/-

மேலதிக விவரங்களுக்கு 021 - 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

*பதிவாளர்*
*04.04.2003*

(சி-27133)



## ஓவியக் கண்காட்சி - 2003

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு ஓவியக் கண்காட்சி ஒன்றை எதிர்வரும் மே மாதப் பிற்பகுதியில் நடத்தத் தீர்மானித்துள்ளது. இதற்காக மாணவர்களிடமிருந்தும், இத்துறை சார் கலைஞர்களிடமிருந்தும் ஓவியங்கள் கோரப்படுகின்றன. விரும்பிய அளவு பிரமாணத்தில் காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டதான ஓவியங்களை நாம் வரவேற்கின்றோம். நவீனம் சார்ந்ததாகவோ, மரபு சார்ந்ததாகவோ இவை அமையலாம். இவை யாவற்றையும் கருத்திற்கொண்டு ஓவியங்களை மே மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக -

**உதவிப் பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி அமைச்சு, திருகோணமலை**

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

ஆர். தியாகலிங்கம்
செயலாளர்.

*கல்வி பண்பாட்டலுவல்கள்*
*விளையாட்டுத்துறை அமைச்சு,*
*வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.*

(சி-27110)



## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 31 | 21 |
| - | - |
| 12 | 08 |
| - | - |
| 1960 | 1988 |

## திருமதி உமாபதி தவம

*திதி:-05-04-2003*

நாவற்குழி மண் பெற்றெடுத்த சித்திரமே - உமா!
சிரிக்கும் பொற் சித்திரமாய் சிந்தை மகிழ் கற்பனையாய்
இனிமையெலாம் உருவாய் - உமாவெனும்
பொற்கொடியே கற்பகமே!
பாசத்தின் சிகரமே! அன்பின் உறைவிடமே!
மூவைந்து ஆண்டுகள் கடந்தாலும்
உனை நாம் மறவோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மா, அண்ணா,
அண்ணி, மருமகன்.

நாவற்குழி.

(16275)



(தேற்றாதீவு பங்குத்தந்தை) **அருள்திரு. போல் றொபின்சனுடன் இணைந்து**

பாடி, செபித்து, இறை அனுபவம் பெறவும்,

இயேசுவின் நாமத்தில்

தீமைகளிலிருந்து விடுதலை பெறவும்

அனைவரையும் அழைக்கின்றோம்!

ஏப்ரல் 7 (*திங்கள்*) : மாலை 5.30 இறைவனைப் புகழ்ந்துபாடுவோம்

ஏப்ரல் 8 (*செவ்வாய்*) : காலை 9.30 - 1 மணி இளைஞருக்கான இறை தியானம் (யாழ். பேராலயத்தில்)

மாலை 5.30 இறை ஆசீர் வேண்டி வழிபாடு

ஏப்ரல் 9 (*புதன்*) : 9.30 - 1 மணி ஆண்டு 8 - 11 மாணவருக்கான வழிபாடு

மாலை 5.30 - இரவு 12 மணிவரை : இறை-தியான-குணமாக்கல் வழிபாடு.

இடம் : புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் (கச்சேரி - நல்லூர் வீதி, நல்லூர்).

(16300)

# இடம் மாற்றம்

வதிரி அம்மன் கோவில் தெற்கு வீதியில் பூஜிக்கப்பட்டுவந்த மிருசுவில் துர்காபுரம் ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் இன்று 05.04.2003 முதல் மீண்டும் பழைய இடத்தில் செயற்பட வுள்ளது. அத்துடன் பங்குனி இறுதித் திங்கள் அன்று காலை 11 மணிக்கு வாளேற்ற வைபவமும் தொடர்ந்து அடியார்களுக்கு அருள் வாக்கும் அளிக்கப்படும்.

(16378) **சி.நவரத்தினம், தர்மகர்த்தா.**

# ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் பொதுக்கூட்டம்

காலம்:- 18.04.2003 வெள்ளிக்கிழமை காலை 10 மணி.

இடம் :- கல்லூரி மண்டபம்.

அமைப்பு விதிகளின் கீழான நிகழ்ச்சி நிரல் வழியே கூட்டம் நடைபெறும்.

உறுப்பினர் தவறாது வருக.

(C/27143) - இணைச்செயலாளர்.

# gtz GTZ - Jaffna Rehabilitation Project

**We wish inform the general public, partner Organisations both in the Govermment and private Sectors, Beneficiaries and relevant authorities that our office has been moved to a new premises with effect from 12th March 2003.**

our new office is at No.472, Main Street, Jaffna.
Telephone No: 021 - 2222635 Fax: 021 - 2222238
021 - 2226011

March28, 2003 Field Team Leader 472, Main Street,
GTZ - JRP Jaffna.

## ஜி.ரி.இசற் - யாழ். புனர்நிர்மாண திட்டம்

பொது மக்களுக்கும் எம்முடன் சேர்ந்து பணியாற்றும் அரச அரசசார் பற்ற நிறுவனங்களுக்கும் ஏனைய சார்புடைய அலுவலர்கள், பயனாளி கள் சகலருக்கும் எமது நிறுவனத்தின் யாழ். அலுவலகம் புதிய விலாசத் துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

எமது புதிய அலுவலக விலாசம் : 472. பிரதான வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.:021 - 2222635 தொலைநகல்:
021 - 2226011 021 - 2222238

வெளிக்கள குழுத்தலைவர்
ஜி.ரி.இசற் - யாழ்.புனர்நிர்மாண திட்டம். 472,பிரதான வீதி,
28.03.2003 யாழ்ப்பாணம்.

(C-27140)

# தொடர்புகொள்ளவும்

11.03.2003 அன்று இரவு நாச்சிமார் கோயிலடியில் உள்ள எனது விற்பனை நிலையத்தில் ரூபா 58,500/= பெறுமதியான அங்கர் பால்மா பெட்டிகள் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**S.விக்கினேஸ்வரன்,**
**விநாயகர் ரேடேர்ஸ்,**
**1026, கே.கே.எஸ். வீதி,**
**நாச்சிமார் கோயிலடி,**
**அரசடி, யாழ்ப்பாணம்.**

(16381)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுலகில் 10 - 07 - 1930



விண்ணுலகில் 06 - 03 - 2003

## அமரர் தம்பிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

*(அரியாலை, கச்சேரியடி - இளைப்பாறிய நீதிமன்ற முதலியார்)*

மறைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியை கள் இன்று (05. 04. 2003) சனிக்கிழமை காலை 10. 00 மணியள வில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியனவற்றிலும் பங்குகொள் ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அழைக்கின்றோம்.

*06, பாரதி வீதி,*
*கச்சேரியடி, சுண்டிக்குளி.* (சி-27141) - குடும்பத்தினர்.

## நுணாவில் பகுதியில் உரிமையாளரிடம் வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.5

சாவகச்சேரி, நுணாவில் பகுதியல் படையினரின் பாவனையில் இருந்த பொதுமக்களின் எட்டு வீடுகள் உரிமை யாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாக யாழ். பாதுகாப்புத் தலைமை யகம் தெரிவித்துள்ளது.

எஸ்.விக்கினேஸ்வரராஜா, சி.லக்ஷ் மன், வே.நாகம்மா, என்.சிவனேஸ்வர ராஜா (இரு வீடுகள்), எஸ்.கந்தசாமி (இரு வீடுகள்), ச.கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் வீடுகளே கையளிக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

## நவாலி,ஆனைக்கோட்டையில் வலுக்குறைந்த மின்சாரம்

நவாலி,ஏப்.5

நவாலி, ஆனைக்கோட்டையின் சில பகுதிகளில் மாலை 6மணிக்குப் பின்னர் மின் குமிழ்கள் மங்கிய நிலை யில் ஒளிர்கின்றன எனக் கூறப்பட்டது.

இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், விளக்கு வெளிச்சத்தில் படிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப் பட்டது.

இதேவேளை, இப் பகுதிகளில் சட்ட விரோத மின்பாவனையும் அதி கரித்துள்ளது.

(எ-100)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஏப்.5

எதிர்வரும் 7ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த யாழ்.மாவட்டத்திலுள்ள, பதிவுசெய் யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதென யாழ்மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜே.எவ்.ஏ. ரூபசிங்கம் தெரிவித்துள் ளார்.

(ம-5)

## வரணி ஆஸ்பத்திரிக்கு நிரந்தர வைத்தியர்

வரணி,ஏப்.5

வரணி மத்திய மருந்தகத்திற்கு முழுநேர வைத்தியர் ஒருவர் கடந்த முதலாம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பகுதி நேர வைத்தியர் ஒருவரே இங்கு கடமை யில் இருந்தார். இதனால் நோயாளி கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர்.

டாக்டர் வி.எஸ்.இரத்தினம் என் பவரே இவ்வாறு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(எ-170)

## குடாநாட்டு கிணற்றுநீர் மாதாந்தம் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஏப்.5

யாழ்.குடாநாட்டிலுள்ள தெரிவு செய்யப்பட்ட 120 கிணறுகளின் தண ணீர் மாதந்தோறும் வடமாகாண நீர் வளச் சபை ஆய்வாளர்களால் பரி சோதனைக்குட்படுத்தப்படுகிறது என் றும்-

கிணற்று நீரின் நீர்மட்டம், தண் ணீரிலுள்ள குளோரைட் அளவு போன் றன மாதத்தில் இரண்டு தடவைகள் சோதித்து அறியப்படுவதாகவும்- சபை உத்தியோகத்தர் ரி.திருக்குமார் தெரிவித்தார்.

(எ-9)

## திருத்தம்

கசிப்பு வழக்கில் அபராதம் விதிப்பு என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம் உதயனில் 13ஆம் பக்கத்தில் வெளி யாகிய செய்தியில்

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனையில் ஈடுபட்டமை தொடர் பான வழக்கில் கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த திசைவீரசிங்கம் யோகரத்தினம் என்பவரிடம் தண்டப்பணம் அறவிடப் பட்டதாக வெளியான தகவல் தவறா கும்.

அந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட சண்முகம் நாகம்மா என்பவருக்காக பிணை நின்றதைத் தவிர பிரஸ்தாப நபருக்கும் அந்த வழக்குக்கும் வேறு எந்தத் தொடர் பும் கிடையாது என்பதைத் தெரிவித் துக்கொள்கிறோம்.

அவரது பெயர் தவறுதலாக அந்த செய்தியில் இடம்பெற்றதால் அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சல்களுக்காக வருந்துகிறோம்.

(ஆர்)

# 'SELECTION OF SIGNBOARD DESIGNER'

**GTZ - International Services Asia,** on behalf of the **Contracted construction companies,** gives hereby notice for a tender for **Signboard Designing** for the **'Rehabilitation of schools in Jaffna.'**

The presumed number of signboards to be painted on the outer walls of the schools is 80. The size is 6' x 9' and to be painted in exterior with oil paint on the walls of the schools, which are located in all five educational zones on the Jaffna peninsula.

The tender documentation with the design of the signboards are available from the *Project Office at 521/11 Point -Pedro Road, Nallur, Jaffna* from Monday 07.04.2003 to Wednesday, 09.04.2003 Opening Hours are 8.00 a.m. to 5.30 p.m.

**Field co-ordinator**
GTZ - International Services Asia
Rehabilitation of School - Office Jaffna.
521/11, Point Pedro Road,
Nallur, Jaffna.

## விளம்பரப் பலகைகள் வரைஞர்களை தேர்ந்தெடுத்தல்

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக மாதிரி விளம்பரப் பலகைகள் வரைவதற்கு, ஒப்பந்த அடிப்படையிலான நிறுவனங்கள் சார்பில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் **(GTZ)**

## கேள்வி அறிவித்தல்

பாடசாலைகளின் வெளிப்புறச் சுவர்களில் வரையப்பட வேண்டிய விளம்பரப் பலகைகளின் உத்தேச எண்ணிக்கை 80. பரிமாணம் 6' x 9'. யாழ்.குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலுமுள்ள பாடசாலைகளின் வெளிப்புறச் சுவர்களில் தரமான ஒயில் பெயின்ற (Oil Paint) மூலம் வரையப்பட வேண்டும். கேள்வி அறிவித்தல் சம்பந்தமான பத்திரங்கள் மற்றும் குறிப்பிட்ட விளம்பரப் பலகைகள் ஆகியவற்றைக் கீழ்க்காணும் முகவரியில் 2003.04.07 - திங்கள் முதல் - 2003.04.09 புதன்கிழமை வரை, காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: திட்டமிடல் பணிமனை,
521/11, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**வெளிக்களத் தொடர்பாளர்,**
ஜி.ரி.இசற். சர்வதேச சேவைகள் நிறுவனம்,
பாடசாலைகள் புனர்நிர்மாணம் - யாழ்.பணிமனை,
521/11, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/27139)

# மரண அறிவித்தல்கள்

## வெள்ளையர் கிருஸ்ணபிள்ளை

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெள்ளையர் கிருஸ்ணபிள்ளை நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கி.புஸ்பமணியின் அன்புக் கணவரும் உதயகுமார் (வன்னி), சாந்தகுமாரி (கனடா), நித்தியானந்தன் (கனடா), சிவகுமாரி (பிரான்ஸ்), கிருஸ்ணகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நமீர், லதன், சந்திரகலா, கலாரூபி, சிறிரதி, அஞ்சலிதேவி ஆகியோரின் மாமனாரும் செல்லம்மா, சின்னையா, மார்க்கண்டு, சின்னத்துரை ஆகி யோரின் சகோதரனும் அன்னப்பிள்ளை, லக்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் நிஷாந்தினி, சுரேஸ்கண்ணா, கிருயாணி, செந்தூர்க் கண்ணா, சமீர, ஸாரா, சகி, அரவிந், ரக்சன், உதயா, மிதுயாணி, றீற்ரா, டென்சி, சஞ்சிகா ஆகியோரின் பேரனும் அம்பலம், மார்க்கண்டு ஆகி யோரின் சகலனும் சண்முகம் நாகம்மா, பாக்கியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2003) நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய், வடக்கு.* (16386) தகவல் மகேந்திரம் (பெறாமகன்)

## சண்முகம்பிள்ளை காசிப்பிள்ளை

(நாத்தாண்டியா)

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகம்பிள்ளை காசிப்பிள்ளை நேற்று (04.04.2003) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காமாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற காமாட்சி, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீ சண்முகராஜா (ஜெயராம்ஸ்), ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற ஸ்ரீ றங்கராசா, இராஜராஜேஸ்வரி, இராஜசுலோசனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லையா (குகன் ஸ்ரோஸ், யாழ். - கொழும்பு), சண்முகநாதன் (பிரான்ஸ்), பத்மராணி, சாந்தினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஐங்கரன் (லண்டன்), சுதர்சினி, சிவதர்ஷினி, வதனா, பராபரன், குகரூபன், குகப்பிரியா, குகலக்ஷிமி, சங்கீதா, உமா, றஞ்சித்குமார், காயத்திரி, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*என்னாங்கப்பிட்டி, காரைநகர்.* (16387) தகவல் ஸ்ரீ.சண்முகராசா (மகன்)

## உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாண சபை

# வடக்கு ~ கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது "ஆஅவ" கடன் இல. 1846 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல் - 15

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வருமானங்களின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | VA/NECORD/HS/02 | நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை புனர்நிர்மாணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 01 | M6 | 59, 000/- |
| | | நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை புனர்நிர்மாணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 02 | M6 | 54, 000/- |
| | | நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை புனர்நிர்மாணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 03 | M6 | 62, 000/- |
| 02. | MN/NECORD/HS/06 | அடம்பன் மாவட்ட வைத்தியசாலை புனர்நிர்மாணம், மன்னார் மாவட்டம் - தொகுதி 01 | M6 | 63, 000/- |
| | | அடம்பன் மாவட்ட வைத்தியசாலை புனர்நிர்மாணம், மன்னார் மாவட்டம் - தொகுதி 02 | M6 | 58, 000/- |
| | | அடம்பன் மாவட்ட வைத்தியசாலை புனர்நிர்மாணம், மன்னார் மாவட்டம் - தொகுதி 03 | M7 | 44, 000/- |
| 03. | VA/NECORD/IR/01 | பாவற்குள நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 01 | M6 | 51, 000/- |
| | | பாவற்குள நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 02 | M6 | 55, 000/- |
| | | பாவற்குள நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 03 | M6 | 64, 000/- |
| | | வவுனியா மாவட்ட - பாவற்குள பிரிவிற்கான நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம் - தொகுதி 04 | M6 | 70, 000/- |
| 04. | MU/NECORD/RD/01 | வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியின் 8.7 கிலோமீற்றரில் அமைந்துள்ள பாலம் நிர்மாணம், முல்லைத்தீவு மாவட்டம் - தொகுதி 01 | M7 | 33, 000/- |
| | | வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியின் 8.7 கிலோமீற்றரில் அமைந்துள்ள பாலம் நிர்மாணம், முல்லைத்தீவு மாவட்டம் - தொகுதி 02 | M7 | 32, 000/- |
| | | வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியின் 8.7 கிலோமீற்றரில் அமைந்துள்ள பாலம் நிர்மாணம், முல்லைத்தீவு மாவட்டம் - தொகுதி 03 | M7 | 22, 000/- |
| 05. | JF/NECORD/RD/01 | செம்பியன்பற்று கட்டைக்காடு மீனவ வீதி 19.19 கி.மீ. தூரம் புனருத்தாரணம், யாழ்ப்பாண மாவட்டம் - தொகுதி - 01 | M6 | 53, 000/- |
| | | செம்பியன்பற்று கட்டைக்காடு மீனவ வீதி 19.19 கி.மீ. தூரம் புனருத்தாரணம், யாழ்ப்பாண மாவட்டம் - தொகுதி - 02 | M7 | 48, 000/- |
| | | செம்பியன்பற்று கட்டைக்காடு மீனவ வீதி 19.19 கி.மீ. தூரம் புனருத்தாரணம், யாழ்ப்பாண மாவட்டம் - தொகுதி - 03 | M7 | 43, 000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   - I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக "ICTAD" நுடன் மேற்படி M7 இற்குப் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.
   - III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது, வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.
   - IV. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   - V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   - VI. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.
4. இதுதொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கூறுவிலையிடமுடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கூறுவிலையாக அமையவேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு - கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக் கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோர் மேலும் தகவலை கூறுவிலைப் படிவத்தில் பெறமுடியும் என்பதுடன், கூறுவிலை ஆவணங்களை திட்டப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
   தொலைபேசி 026 - 27434 - 6 பக்ஸ்: 026 - 27101, ஈமெயில் necord@sltnet.lk.
6. கூறுவிலை ஆவணத் தொகுதிகளை 07.04.2003 இலிருந்து 24.04.2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாளகளில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத ரூபா 1000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கூறுவிலையிடுவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும், இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கூறுவிலையையும் கூறுவிலை கொண்டிருக்கவேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கவேண்டும்.
8. பொறிவைத்த கூறுவிலைகள் தலைவர், திட்ட கேள்விச் சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 30.04.2003 மாலை 2.00 மணிக்கு முன்பாக அனுப்பப்படவேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கூறுவிலைகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
9. முன்கூட்டியே கூறுவிலை கூட்டமொன்று, இதன் தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 22.04.2003 அன்று மாலை 2.00 மணிக்கு நடைபெறும்.
10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

த.லங்காநேசன்
வடக்கு - கிழக்கு சமுதாய புனருத்தாரண
அபிவிருத்தித்திட்ட கேள்விச் சபைத் தலைவர்.

140, மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

(சி:27437)

# மிருதங்க அரங்கேற்றம்



## செல்வன் தம்பிராசா ஜனகன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர்
**சிதம்பரநாதன்** அவர்களின் மாணவன்

அரங்கிசைக் கலைஞர்கள்

| | |
|---|---|
| பாட்டு | - திரு. தவநாதன் றொபேட் |
| வயலின் | - திரு.மனோகரன் றதீஸ்குமார் |
| மிருதங்கம் | - செல்வன் தம்பிராசா ஜனகன் |
| கஞ்சிரா | - திரு. வரதராஜா ரமணா |
| முகர்சிங் | - திரு. கந்தசாமி நந்தகுமார் |


காலம் : 06.04.2003 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 மணி
இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

| | | |
|---|---|---|
| வீடியோ படப்பிடிப்பு | : | முத்தொளி |
| புகைப்படப்பிடிப்பு | : | சாயி போட்டோ |
| ஒலி அமைப்பு | : | விக்ரர் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*
(16374)

திரு. திருமதி தம்பிராசா
*120/77, சங்கமித்தை மாவத்தை, கொழும்பு - 13.*





- வெஸ்டன் யூனியன்மூலம் பணம் பெறும் அனைவருக்கும் மார்ச் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து விசேட புத்தாண்டு பரிசுகள் காத்திருக்கின்றன.
- இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.
- இந்த பண்டிகை காலத்தில் வெஸ்டன் யூனியன்மூலம் பணத்தை அனுப்பி வெஸ்டன் யூனியனின் சர்வதேச கோலிங் காட்டுகளையும் அழகான குடைகளையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுமாறு உங்கள் அன்புக்குரியவர்களிடம் அறிவிக்கவும்
- ரூ.75,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பெறும் அனைவருக்கும் இந்த வெகுமதிகள் கிடைக்கும்.

**விரையுங்கள்!**
இருப்பு இருக்கும்வரையே
இந்த சலுகை

ஹொட்லைன்: 452666

WESTERN UNION பணப் பரிமாற்றல்

செலான் வங்கி


# யாழ்ப்பாணம்
# அத்தியடி பிள்ளையார் ஆலய
# மஹோற்சவம் - 2003

06.04.2003 (ஞாயிறு) நண்பகல் 12.00 மணிக்கு
**கொடியேற்றம்**
13.04.2003 (ஞாயிறு) மாலை 6.00 மணிக்கு
**சப்பறம்**
14.04.2003 (திங்கள்) காலை 9.00 மணிக்கு
**தேர்த்திருவிழா (புதுவருடப்பிறப்பு)**
15.04.2003 (செவ்வாய்) காலை 9.00 மணிக்கு
**தீர்த்தத் திருவிழா**

மஹோற்சவக் குருக்கள்:
**சிவஸ்ரீ நா.யோகேஸ்வரக் குருக்கள்**

உற்சவ காலத்தில் தினமும் மாலை 7.15 மணிக்கு
அருட் சொல்வாரி, சைவப்புலவர்
திரு.செ.கந்தசத்தியதாசன் - B.A. (Hons), Dip. in Edu.
அவர்கள் 'விநாயக புராணம்' என்னும் பொருளில்
தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

இங்ஙனம்
பிள்ளையார் பணியில் நிற்கும்
**கோயில் நிர்வாகம்.**

*விளம்பர அன்பளிப்பு:*
**நியூ பிரியங்கா நகைமாளிகை**
26, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(16371)

# நாடக ஆற்றுகையூடான மிதிவெடி விழிப்புணர்வு செயற்பாட்டுக்கான இணைப்பாளர் தேவை

பின்வரும் தகுதிகளுடையவர்களிடமிருந்து
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ நாடகத் துறை சார்ந்த அனுபவம்.
★ ஆங்கிலத்தில் எழுதும், சரளமாகப் பேசும் திறன்.
★ கணனி அறிவு.
★ மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கான அனுமதிப்பத்திரம்

| | | |
|---|---|---|
| மாதாந்த வேதனம் | - | 6, 000/- |
| வயதெல்லை | - | 20 - 30 |
| விண்ணப்ப முடிவு திகதி | - | 10.04.2003 |

விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடம்/அனுப்ப வேண்டிய முகவரி:-
**தலைவர்,**
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,**
**106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.
(C/27138)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா மாசிலாமணி பத்தர்

கொக்குவில் மேற்கு, மணியர்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற இளையதம்பி கந்தையாவின் மகன் மாசிலாமணி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கமலம்மா தம்பதியின் மூத்த மகனும் கனகம்மாவின் கணவரும் மகேஸ்வரி, மங்கையற்கரசி, மனோன்மணி, மகிழரத்தினம், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் மகாதேவா, மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவளராணி, கருணாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோவிந்தராசா, டொறின் மேரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2003) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*மணியர்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(16369)

தகவல்:
க.மகாதேவா (சகோதரன்).
ந.கோவிந்தராசா (மருமகன்).

## கனகசபை கனகலிங்கம்

(ஓய்வுபெற்ற யாழ்.மாநகரசபை பிரதம எழுதுவினைஞர்)

முகமாலையைப் பிறப்பிடமாகவும் இல.158, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட க.கனகலிங்கம் நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் திருமதி கமலாம்பிகை அம்மா அவர்களின் அன்புக் கணவரும் சோமசேகரம்(பௌதிகவியற்றுறை,யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி தி.சோமகலா (யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), சந்திரசேகரம், திருமதி ஜெ.கோமதி, குணசேகரன், தர்மசேகரம் (சேகர்-3ஆம் ஆண்டு உளவியல் சிறப்புக்கலை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இ.திருஞானமூர்த்தி (வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை), ம.ஜெகதீஸ்வரன், திருமதி சோ.வளர்மதி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்), திருமதி ச.பிரேமிளா திருமதி கு.சந்திரா ஆகியோரின் மாமனாரும் பவித்திரன், கலாரூபன, திவ்யா, நர்மதா, அபிஷா, மயூரன், மதுசன், அனிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 158, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள தற்காலிக வதிவிடத்தில் நேற்று 04.04.2003 நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*158,பொற்பதி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*
நிரந்தர முகவரி:
*முகமாலை, எழுதுமட்டுவாழ்.*

தகவல்:
க.சோமசேகரம்
(மகன்)
(16377)

## மாவை கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவில்

### மணவாளக்கோலத் திருவிழா

நாளை (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் தொடக்கம் அபிஷேகம திருவூஞ்சல் திருவிழா நடைபெறும்.

பகல் ஒரு மணிக்கு அன்னதானம். காலை 9 மணிக்கு முன் தெல்லிப்பழைத தடைமுகாமுக்கு வரவும். கோவிலுக்கு அழைத்துச் செல்லப்படும்.

உயர்திரு த.ச.அப்புத்துரை அவர்கள் உபயமாக நடைபெறும்.

(16397) - அறங்காவலர்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சாரதாம்பாள் சுப்பையா

சுருவிலைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட சாரதாம்பாள் 03.04.2003 வியாழக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவயோகம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை பார்வதியின் மருமகளும் மைதிலி, பாரதி (நோர்வே), மணிவாசகன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரம் (சாளினி நகையகம் - யாழ்ப்பாணம்), குகானந்தா (நோர்வே), விஜயமலர் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் அம்பிகாவதி (கனடா), கமலாம்பிகை (கனடா), கணேசு (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் சண்முகநாதன் சிவக்கொழுந்து, நாகலிங்கம், கனகசுந்தரம், மகாலட்சுமி, ருக்மணிதேவி, தியாகராசா, ஆனந்தசிவம், மகாலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் விசாளினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அபிராம் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), அபித்ரா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அபிநந்தா, சுஜித்தா, தர்ஷனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*423, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (16406)

தகவல்:
பா.சுந்தரம்
(மருமகன்)

## நாகலிங்கம் கணபதிப்பிள்ளை *(துரை)*

வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது 12, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணபதிப்பிள்ளை நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பராசக்தி தம்பதிகளின அருமை மகனும் காலஞ்சென்ற கனகரத்தினம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் (நயினாதீவு) மருமகனும் நளாயினியின் அன்புக் கணவரும காலஞ்சென்ற திருமதி தாமோதரம்பிள்ளை நாகரத்தினம்மா மற்றும் ஆறுமுகம் (கனடா), நடராசா (கனடா), திருமதி வேந்தனார் சௌந்தரநாயகி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, விந்துஷர் வேந்தனார், சாரதா மற்றும் பவானி, கார்த்திகேசு (ஆசிரியர், நயினாதீவு), பாலகிருஷ்ணன், இராஜலிங்கம், துரைமணி, திருமதி நாகேஸ்வரன், திருமதி நமசிவாயம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2003) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.நடராசா (சகோதரர்),
நா.க.துரைமணி
(மைத்துனர், நயினாதீவு)

*இல.12, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்.* (16405)

## வல்லிபுரம் சின்னப்பு கந்தசாமி

### (செட்டியார் - V.S.கந்தசாமி)

(முன்னாள் பண்டகசாலைப் பொறுப்பாளர், மாதம்பை, இறக்குவானை)

கல்வியோரம், அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வட்டப்பாதி, புலோலி மேற்கு, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட V.S.கந்தசாமி அவர்கள் நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னப்பு - இராசமணியின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவகுமார் (லண்டன்), பாலகுமார் (கனடா), சாந்தகுமார் (லண்டன்), விஜயகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சரஸ்வதி (அச்சுவேலி), நாகரத்தினம் (வரணி), பூபதி (கொடிகாமம்), ஞானம்பிகை (இருபாலை), வாலாம்பிகை (வரணி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிதம்பரப்பிள்ளை (கனடா), இராசம்மா (பருத்தித்துறை), தங்கம்மா, காலஞ்சென்ற நாராயணசாமி, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, திருமதி மண்டலேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற இளையதம்பி, காலஞ்சென்ற இராசையா, குணரத்தினம், பேரம்பலம், சிவானந்தம் ஆகியோரின் மைத்துனரும் லோகேஸ்வரி (லண்டன்), ராகினி (கனடா), சிவதர்சனி (லண்டன்), விஜயசிறீ (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் நிருஷாந்த், நிஷாந்த், வினோத், கிதுர்ஷன், மயிலன், குமரன், சுவேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டப்பாதி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.* (C-27150)

தகவல்
மனைவி,
மக்கள்.

## கனகரட்ணம் ரவீந்திரராஜன் (ரவி, குட்டி)

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் ரவீந்திரராஜன் (02.04.2003) அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் கனகரட்ணம், தவேஸ்வரி தம்பதிகளின் அருமை மகனும் வரதராஜன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பரதராஜன் மற்றும் மாலினி (ஜேர்மனி), சாந்தகுலேந்தினி (கனடா), பிரபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின அன்புச் சகோதரனும் சுலோசனா (ஜேர்மனி), ஸ்ரீதரன் (ஜேர்மனி), மோகன் (கனடா), வாசுகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் இல.11, கச்சேரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வேதநாயகம்
(வேதம் - மாமன்)

*இல.11,கச்சேரி ஒழுங்கை,* (16402)
*யாழ்ப்பாணம்.*

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தையல்நாயகி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தையல்நாயகி நேற்று (04.04.2003) ஆஸ்திரேலியாவில் உள்ள மல்பேணியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க.சிவனேசன்
(மகள் - கனிஷ்ட பிரிவு அதிபர், யா/மெமோறியல் ஆங்கில பாடசாலை.

*வீரபத்திரர் கோயிலடி,*
*சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.* (C/27151)

## ஐயாத்துரை முருகானந்தன்

யார்வத்தை, வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை முருகானந்தன் (கிராம அலுவலர் -பொறுப்பதி, செம்பியன்பற்று) நேற்று 04.04.2003 அகாலமரணமானார்.

அன்னார் திருமதி ப.முருகானந்தனின் (லதா - ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் யதுநந்தா (வடமராட்சி ம.ம.கல்லூரி), அபிராம் (நெல்லியடி மெ.மி. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கார்த்திகேயன், காலஞ்சென்ற சரஸ்வதிதேவி, தவகணேசன் பொன்னம்பலநாதன், பாலவடிவேலன் (வேலவன் ஸ்ரோர்ஸ்), தவதேவி, சரவணபவான் ஆகியோரின் அப்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 05.04.2003 மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.பாலவடிவேலன் (சகோதரர்)

*யார்வத்தை,*
*வதிரி, கரவெட்டி.* (C/27155)


### எமது புதிய வீடியோ CD வெளியீடு

☆ பவளக்கொடி

பிரதிகள் உடன் பெறலாம்.

விஷ்ணு வீடியோ

K.K.S. றோட் கோண்டாவில்.

வடமராட்சி வாடிக்கையாளர்கள் இப்படப்பிரதிகளை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சோலை வீடியோ விஷன்

பிரதான வீதி - நெல்லியடி. (27153)

### கலைமகள் அச்சகம்

யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக, திருநெல்வேலி.

O/L பரீட்சை முடிவுகள் Internet மூலம் பார்த்துக் கொடுக்கப்படும்.

பைன்டிங் செய்யக் கூடிய பெண் பிள்ளைகள் தேவை.

### லக்ஷ்மி இணுவில்

பார்த்திபன், திவ்வியா உன்னி, றஞ்சித், வடிவேலு நடித்த

சப்ராஷ் (ரீலஸ்)

தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

11.00, 2.45, 6.00 (பு.நே.)

விஜய், ரீமாசென் நடித்த

பகவதி

வெள்ளி, சனி மட்டும் இரவு 8.45 (பு.நே.)

HOLLOW MAN

10.04.2003 முதல் JURASSIC PARK 3

### ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந்த், பூமிகா, விவேக், ராதிகா

ரோஜாக்கூட்டம்

10.30, 2.30, 6.30

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.30 இற்கும்

### நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், ஸ்நேகா, ரகுவரன நடித்த

வசீகரா

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)




## சேவை நலன் பாராட்டு

யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தில் 20.10.1999 இல் இருந்து அதிபராகக் கடமையேற்று 05.04.2003 வரை எமது பாடசாலையில் நற்பணிகள் பல ஆற்றி ஓய்வுபெறும்

### திரு. அருணாசலம் வேலுப்பிள்ளை

அவர்கள் சிறப்புகள் பல பெற்றுவாழ இறைவனை வேண்டுகின்றோம்.

*யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை*
*-வித்தியாலயம்,*
*வரணி.* (C/27136)

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கத்தினர்.

## தவறிவிட்டன

முகமாலையில் 04.04.2003 அன்று ஒரு கறுப்பு சூட்கேஸும், ஒரு கறுப்புநிற பையும் தவறிவிட்டன. தவறி எடுத்தவர்கள் 0777-241764 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(16398)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை நாகலிங்கம் (பரமசிவம்)

### (பிரபல கொழும்பு வர்த்தகர்)

புங்குடுதீவு, 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.104 / 15, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு -13 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகலிங்கம் (பரமசிவம்) அவர்கள் 01.04.2003 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (கொழும்பு வர்த்தகர்) - முத்தம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற புங்குடுதீவு கிழக்கு தலைமை ஆசிரியர் சோமசுந்தரம் - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பங்கயற்செல்வியின் அன்புக் கணவரும் கஜேந்திரன் (டென்மார்க்), சுகந்தினி, கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மீனாட்சி, காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் (கணேசன்), வடிவேல் ஆகியோரின் சகோதரரும் தர்ஷினி (டென்மார்க்), சுதர்சன், பாசநேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிராஜ் (டென்மார்க்), ரஜிகா (டென்மார்க்), அக்ஷயன், அஜயன், அஷ்வினி ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2003) ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் நடைபெற்றுப் பொரளை கனத்தை மயானத்தில் காலை 10 மணிக்கு தகனஞ்செய்யப்படும் என்பதை ஆழ்ந்ததுயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
(16399) மனைவி, பிள்ளைகள், மருமக்கள்

## திருமதி வீரலெட்சுமி கணபதிப்பிள்ளை

ஆறுகால் மடத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியா கும்மிடிப்பூண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரலெட்சுமி கணபதிப்பிள்ளை நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின்(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா வாரிப்பிள்ளையின மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகளும் மாவலிவாணி,ஸ்கந்தமாவலி,தசரோகினி ஆகியோரின் தாயாரும விசாகத்திலகர்,மஞ்சுளா,அருந்தவராசா ஆகியோரின் மாமியாரும் சிவலிங்கம்,முத்துலிங்கம்,நாகலெட்சுமி, மகாலெட்சுமி ஆகியோரின் சகோதரியும் போயன், கிரிதரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று (05.04.2003) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலைவீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.* (16396)
***T.P. : 021 222 5760***

தகவல்:
நே.நாகலெட்சுமி
(சகோதரி)

## கணபதி சின்னத்துரை (சின்னவி)

### (கிளானை, கொல்லங்கலட்டி)

கிளானை,கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதி சின்னத்துரை நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதி - வள்ளல் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகர் மற்றும் இலட்சுமி,சின்னப்பிள்ளை, இளையகுட்டி,துரை(சிங்கப்பூர்), செல்லம்மா, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் வன்னிக்குட்டி சின்னக்கண்டுவின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2003) சனிக்கிழமை பிற பகல் 2.00 மணிக்கு கந்தரோடை வசிப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உப தபாற்கந்தோரடி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (16391)

தகவல்:
வன்னிக்குட்டி
சின்னக்கண்டு

## திருமதி துரையப்பா பொன்னு

கைதடி மேற்கு, கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரேசு துரையப்பா அவர்களின் அன்பு மனைவி பொன்னு அவர்கள் நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கைதடி தெற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரேசு - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் அன்னம்மா, சேதுலிங்கம், இராசம்மா ஆகியோரின் தாயாரும் செல்லம்மாவின் சிறிய தாயாரும் சின்னத்துரை, கந்தசாமி, பூலோகரஞ்சினி,ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2003) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரியான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (16394)

தகவல்:
து.சேதுலிங்கம் (மகன்)

# பேச்சுமேசையில் விடுதலைப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது என்பதைக் கூறுவதில் வேதனையடைகின்றேன்.

யுத்த நிறுத்தம் வரவேற்கத்தக்கது. ஆனால், இந்த யுத்த நிறுத்தம் அதன் கட்டமைப்பு ரீதியாக திறன் அற்றது. அந்த யுத்த நிறுத்தம் வெளிவந்தவுடனேயே இதனைநாம் சுட்டிக்காட்டினோம்.

யுத்த நிறுத்த ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்து ஆலோசிக்கப்படவில்லை. பிரதமரும், பிரபாகரனும் கையெழுத்திடுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர்தான் அது ஜனாதிபதிக்கு தரப்பட்டது. காலம் செல்லச்செல்ல அந்த யுத்த நிறுத்தத்தின் வலிமையின்மை வெளிப்பட்டு வருகின்றது.

யுத்த நிறுத்தத்தின் கீழ் வடக்கு, கிழக்கில் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக ஏனைய கட்சிகளுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நடைமுறைக்கு வரவில்லை.

நாட்டின் ஆள்புல இறைமையைப் பாதுகாப்பது தொடர்பாக கடற்படைக்கு உள்ள உரிமை தெளிவுபடுத்தப்படவில்லை. புலிகளுடன் மோதல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் நாட்டின் ஆள்புல இறைமையை படைகள் பாதுகாக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதை இவ்வாறு நீங்கள் எப்படி செய்ய முடியும்?

பாதுகாப்பு படையினர் பெரியளவில் அனுகூலமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கில் கேந்திர முக்கியத்துவம் மிக்க பல இடங்களில் இருந்து வேறு நிலைகளுக்கு இடம்மாறும்படி அவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். அப்படிச் செய்யும் போது அவர்கள் மேலும் ஆபத்துக்களை எதிர்கொள்ளக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுவர்.

நாட்டுக்குள் இடம்பெயர்ந்தோருக்கு இடமளிப்பதற்காகவே வேறு நிலைகளுக்கு இடம் மாறும்படி படையினர் கோரப்பட்டுள்ளனர். ஆனால், பொது மக்களைப் பொறுத்தவரையில் அப்படி நடைபெறும் சூழ்நிலை இல்லை.

*கேள்வி* : சமாதான நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் பங்கு என்ன? முழு சமாதான முயற்சிகளையுமே முறியடிக்க ஜனாதிபதி முயல்வதாக ஒரு கருத்து - குற்றச்சாட்டு - கூறப்படுகின்றது.

*பதில்* : அவருக்குக் கெட்டபெயர் ஏற்படுத்தும் நோக்கில்இந்தக் கருத்தைத் தற்போதைய அரசுதான் உருவாக்கி பிரசாரப்படுத்தி வருகின்றது. ஆனால், போரை விடுத்து பேச்சு வழியில்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற அவரது நிலைப்பாடு உறுதியானது.

என்றாலும், நடப்பவை அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கும் அவரால் சிலவற்றை பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. விநோதமான அரசியல் சகவாழ்வை - அதுகுறித்து அரசமைப்பில் நெறிப்படுத்தப்படாவிட்டாலும் - நாம் பின்பற்றவேண்டியவர்களாக உள்ளோம். இது புதுமையான ஒரு போக்கு. சந்தர்ப்ப வசமாக இந்தியாவில் இந்த முறைமை இல்லை. ஆனால், பிரான்ஸில் உள்ளது.

*கேள்வி:* இந்த அரசியல் சகவாழ்வு எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்கும்? அரசியல் ரீதியில் சட்டபூர்வ முறையான அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் பொ.ஐ.மு. பலதடவைகள் ஈடுபட்டுள்ளதே?

*பதில்:* கவிழ்த்தல் என்ற சொல் தொடர்பாக நீங்கள் என்ன கருதுகின்றீர்கள் என்பதைப் பொறுத்தது அது.

*கேள்வி:* சில் கட்சி மாறினால்..

*பதில்:* அப்படி எந்தக் சமயததிலும் நடக்கலாம். அதுதான் 2001 ஒக்ரோபரில் எமது அரசுக்கு நேர்ந்தது.

*கேள்வி:* சமாதான நடவடிக்கைக்குள் இந்தியா எப்போது வரும்? இப்போது பக்கத்திலிருந்து அது பார்த்துக்கொண்டிருந்தாலும் தீர்வு எட்டப்படும் போது இந்தியாவுக்கும் அதில் பங்களிப்பு உண்டே?

*பதில்:* நிச்சயமாக இந்தச் சமாதான நடவடிக்கைகளில் பல்வேறு வெளிநாடுகள் ஏதேனும் ஒரு வகையில் சம்பந்தப்பட்டாலும், இறுதியாக காணப்படும் தீர்வில் - சரித்திர மற்றும் பூகோள ரீதியான காரணங்களினால் - நிரந்தரமான, சட்டபூர்வமான ஈடுபாடுள்ள ஒரே நாடு இந்தியா தவிர வேறில்லை. ஏனைய நாடுகள் எந்த விடயத்துக்கும் வந்து போகலாம். அவர்கள் எதை விட்டுச் செல்வார்கள் என்பதை காலந்தான் கூற வேண்டும்.

*கேள்வி:* ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக வேண்டப்படுபவரும் இந்தியாவில் குற்றவாலியாக அறிவிக்கப்பட்டவருமான பிரபாகரனின் தலைமையில் இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு இந்தியா சமரசம் செய்யும் பிரச்சினை குறித்து உங்கள் கருத்து என்ன?

*பதில்:* இந்தியா சமரசம் செய்ய முடியும் என நான் நினைக்கவில்லை. பாரதிய ஜனதாக்கட்சி தலைமையிலான தற்போதைய அரசால் கூட அது முடியாது.

*கேள்வி:* அப்படியென்றால் நாளை வடக்கு அரசுக்கு பிரபாகரன் தலைவராகி இந்தியாவுக்கு விஜயம் செய்தால் அவருக்கு இந்தியா செங்கம்பளம் விரிக்காதா?

*பதில்:* கடைசிவரை இல்லை. இது குறித்து பல தடவைகள் இந்திய அதிகாரிகளிடம் கேட்டுள்ளோம் அவர்கள் "இலங்கை இறைமையுள்ள நாடு. உங்கள் பிரச்சினையைத் தீர்க்க நீங்கள் வழிசெய்து கொள்ளுங்கள். உங்கள் பிரச்சினை எங்கள் பிரச்சினை அல்ல. உங்களுக்குத் தேவைப்பட்டால் முதலமைச்சராகவோ நீங்கள் விரும்பிய வேறு எப்படியாகவோ பிரபாகரனை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஆனால், எமது நாட்டில் அவருக்கு இடமில்லை" என்று கூறுகின்றார்கள். ஆனால், ஒரு விடயம் உறுதியானது. இங்கு ஒரு தனிநாடு உருவாவதை இந்தியா எப்போதும் சகித்துக்கொள்ளாது. இது தான் இறுதியான உறுதி நிலை. தனிநாடு எப்போதும் இல்லை. மேற்குநாட்டுச் சக்திகள் எதையும் செய்துவிட்டு - இங்கு குழப்பத்தை உருவாக்கிவிட்டு - செல்லும் வலிமை உள்ளவை. அவர்கள் இது பற்றி அக்கறைப்படமாட்டார்கள் ஆனால் இந்தியாவுக்கு அக்கறை உண்டு.

*கேள்வி:* உங்களின் இறைமையை பேணுவதில் அயலில் உள்ள பெரிய நாட்டின் உதவி உங்களுக்கு இருக்கும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?.

*பதில்:* ஆம். பேச்சு மூலம் புதிய அரசமைப்பு இணக்க ஏற்பாடுகளுக்கு நீங்கள். வந்தாலும் கூட சரித்திர, பூகோள காரணங்களுக்காக அதனை இந்தியாவால் ஏற்க முடியாமல் போகலாம். அதற்கு தீவிர உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். தீவிர சக்திகளின் ஈடுபாட்டால் இரண்டு நாடுகளைக் கொண்ட - அவற்றுக்கிடையே ஐக்கிய ராட்சிய இணைப்புக்கொண்ட -ஆட்சி முறை இலங்கையில் திணிக்கப்பட்டால் இந்தியா அதை ஏற்காமல் போகலாம். அதனை அங்கீகரிக்காமல் விடலாம். ஏனெனில், அத்தகைய முறை இந்தியாவிலும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்தியாவில் தெற்கில், வடக்குக்கிழக்கில் காஷ்மரில் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். எனவே, இலங்கையில் பேச்சுக்களை நடத்துவோர் இதனை மனதில் கொள்வது அவசியமாகும் - என்றார் கதிர்காமர்.


## அறிவித்தல்

### எக்ஸ்போ ஏவியேஷன்

ஞாயிற்றுக்கிழமை (06.04.2003) மாலை நேர விமான சேவைக்கு பயணச்சீட்டுக்களைப் பெற்ற அனைவரையும் அன்று மாலை 3.30 மணிக்கு (புதிய நேரம்) சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.

021-2223891, 071-349999, 0777-730666

(C/27149)

## MATHS CENTRE

M.V.M.Road, Nelliyady

2 ஆம் தவணைக்குரிய வகுப்புகள்

Gr. - 4 தொடக்கம் Gr. - 11 வரை

ஆரம்பம் :- 05.04.2003 சனி 2.30 p.m. (ப.நே.)

(16368)



எமது புதிய வீடியோ CD வெளியீடு

☆ பவளக்கொடி

(பிரதிகள் உடன் பெறலாம்)

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(16404)





## மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு

எந்தப் பிரதேசத்திலும் தொடர்புகொள்ளக்கூடிய முறையில் இணைப்புகளுடன் தரப்படும். தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், தீவகம் போன்ற பிரதேசங்களில் தெளிவான முறையில் தொடர்புகொள்ளக்கூடிய மேசைத் தொலைபேசிகள் உடன் இணைப்புகள் வழங்கப்படும்.

இரவு வரும் அழைப்புகள் முற்றிலும் இலவசம்.

வெளியூர் தொடர்பு ஒரு நிமிட அழைப்பு - ரூபா 25/=

உங்கள் தொடர்புகளுக்கு:

T.P. 071 399220

0777 242416

## பவர் செலுலர்

(வின்சர் தியேட்டருக்கு முன்பாக நியூ லலிதா கட்டடம்)

இல.185, கஸ்தூரியார் வீதி, முதலாம்மாடி, யாழ்ப்பாணம்.

(16319)


# வாஷிங்ரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் முதலாவது கூட்டமும் கடந்த நவம்பர் 25 ஆம் திகதி நோர்வேயில் இந்த அடிப்படையிலேயே வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. அவசரத் தேவைகளுக்கான நிதியை வழங்க இந்த மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட அதேவேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசத்தைப் புனரமைப்பதற்குத் தேவையான நிதியைப் பெறும் முக்கிய அரங்கமாக ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தைப் பயன்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், ஏப்ரல் 14 ஆம் திகதி நடக்கும் கூட்டத்திற்கு புலிகளை அழைக்காமல் ஓரங்கட்டுவதன் மூலம் இலங்கை அரசுத் தரப்பை மட்டும் தனித்தரப்பாக உயர்த்தியதன மூலம் மேற்படி கூட்டு முயற்சியை அமெரிக்கா பின்னடையச் செய்திருப்பது கவலைக்குரியது.

தமிழ்ப் பிரதேசங்களைப் புனமைக்கும் முயற்சியில் புலிகளை ஓரங்கட்டுவது சமாதான நடவடிக்கைகளின் போக்குக்கு எதிரானதாகும். அத்தோடு புனரமைப்பு முயற்சிகள் மீதும் சமாதாதன நடவடிக்கைகள் மீதும் உள்ள நம்பிக்கையையும் அது பாழடிக்கச்செய்யும்.

எனவே அமெரிக்காவின் நடவடிக்கையால் புலிகள் அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர். இலங்கையின் வடக்கு, கிழக்குப் புனரமைத்து புனர்வாழ்வளிக்கும் இலங்கை அரசினதும் புலிகளினதும் இணைப் பங்களிப்பை அங்கீகரிப்பதன் மூலம் நோர்வே ஏற்பாட்டிலான சமாதான நடவடிக்கைகளுக்கு செயற்பாட்டு ரீதியான ஆதரவை வழங்கும்படி அமெரிக்காவையும் சர்வதேச நிதி வழங்குநர்களையும் கோருகின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு மாத்திரமன்றி ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட தற்போதைய சமாதானப் பேச்சுக்களின் நிலைமை குறித்து எதுவுமே தெரியாது. இதுவரை என்ன பேசப்பட்டுள்ளது? இனி என்ன பேசப்படவுள்ளது? தீர்வு என்ன? இந்தக் கேள்விக்குக் கூட யாருக்கும் விடை தெரியாது. இந்நிலையில், சமாதான முயற்சிகள் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முயல்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூட சமாதான முயற்சிகள் தொடர்பாக இப்போது சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை நிராகரித்துள்ளாரென 'சுடர் ஒளி' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துக்கூட ஆழமாகப் பேசாத நிலையில் - தீர்வு தொடர்பாக ஆராயப்படாத நிலை யில் - சர்வஜன வாக்கெடுப்பு நடத்து வதை புலிகள் ஏகமனதாக நிராகரிப் பதாக அன்ரன் பாலசிங்கம் சுடர் ஒளி க்குத் தெரிவித்துள்ளார்.

அரசு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமானாலும் கூட அது குறித்து ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும்.

- இவ்வாறு மங்கள சமரவீர தெரிவித்தார்.

## ஈராக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈராக் யுத்தத்தை உடன் நிறுத்து!

★ எண்ணெயைக் கொள்ளையடிக்க ஈராக் மக்களைக் கொல்லாதே!

★ இன்று ஈராக்; நாளை இலங்கை!

★ இன்று பக்தாத்; நாளை யாழ்ப்பாணம்!

★ புஷ் - பிளயர் ஆதிக்கக்கூட்டு; உலக மக்களின் உரிமைக்கு வேட்டு!

★ ஏகாதிபத்திய பிசாசுகளே ஈராக் மக்களைக் கொல்லாதீர்!

★ இராட்சதன் புஷ் ஈராக் மக்களின் இரட்சகனா?

(ஒ-10-5-15)


## கடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய பிணைக்கட்டளைக்கு அமைய அவர் மன்றுக்கு ஒழுங்காக சமுகமளிக்கத் தவறியமை குறித்து மன்றில் மன்னிப்புக் கோருவதாகவும- பிணையில் செல்ல அனுமதிக்கும் பட்சத்தில் யாழ்மேல் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைக்கு அமைய நடந்துகொள்வதாகவும் - சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஒன்பது நிபந்தனைகளின் கீழ் பிணையில் செல்ல யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தத்தீர்ப்பு பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவிருக்கின்றது. (ஒ-3-8)


பபு கொமினிகேசன்
30, வளாகவீதி,
(கம்பஸ்லேன்),
திருநெல்வேலி.

மதனா ஜுவலறி
177/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ARK Enterprises
150, 152 Stanley Road,
Jaffna

இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### K.T. நடராசா

(ஓய்வுபெற்ற பொறியியலாளர், தொலைத் தொடர்பு தலைமையகம், கொழும்பு)

கைதடியைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட K.T. நடராசா நேற்று (04.04.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - செல்லமுத்து தம்பதிகளின் மகனும் அச்செழு மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சகுந்தலை, யோகேஸ்வரன் (ஆய்வுகூட உத்தியோகத்தர், அளவெட்டி அருணோதயக கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2003) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்செழு,*
*நீர்வேலி.*

(16401)

தகவல்
ந.யோகேஸ்வரன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.